بسم الله الرحمن الرحيم

அல் கலாம்

AL-KALAM

பத்திராதிபர் — கூ. அ. அப்துல் மஜீத்

வால்யூம் 3	1926ஹு நவம்பர்	பகுதி 11

இஸ்லாமும் இந்தியாவும்.

இஸ்லாம் மதம் இந்தியாவுக்கு விஜயம் செய்ததை யொட்டிய வரலாறுகள் சரித்திரபுத்தகங்களில் ஏராளமாய் வரையப்பட்டிருக்கின்றனவாயினும் அது சம்பந்தமாய் அறிவிக்க வேண்டிய செய்திகள் பல இன்னமும் அறிவிக்கப்படாமலிருப்பதாகவே நான் கருதுகிறேன். வருங்காலத்தில் இந்தியாவில் இஸ்லாம் எந்நிலைமையை யடையவிருக்கின்றதென்பதை நான் கூறவில்லை. இப்பொறுப்பை பெரும் மேதாவிகளான மகான்களிடம் விட்டு விடுகிறேன். இந்தியாவில் இஸ்லாம் எத்தகைய கௌரவத்தோடு பிரவேசித்தது? இஸ்லாம் மதத்தை எத்தகையோர் இந்தியாவுக்குக் கொண்டுவந்தனர்? கடைசிவரை அவர்களின் அந்தஸ்து எத்தகையதாக விருந்தது? என்னும் விஷயங்களைப்பற்றியே இவ்வமயம் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

அரேபியாவிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் அரிபகாலத்திலேயே இஸ்லாம் பரவிற்று. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் உலகில் பிரகாசித்தது முதற்கொண்டு ஹிஜ்ரீ 11 வது ஆண்டுவரையுள்ள நடவடிக்கைகளே இஸ்லாமின் ஆரம்ப முன்மாதிரியாகும். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்குப் பிறகு கிலாபத்ராஷிதா என்னும் இஸ்லாமிய ஆட்சி பெறப்பட்டது. இதன் ஆரம்பத்தில் இஸ்லாமானது ஓத்திதாது ஏனனும் குறுப

பத்தை அரேபியாவை விட்டகற்றியபின்னர் அரேபியாவிலிருந்து வெளிக்கிளம்பி 'ஷாம்' 'ரூம்' 'மிஸர்' 'அஜம்' ஆகிய நாடுகளில் பிரவேசித்தது.

ஜெயிக்கப்பட்ட பட்டணங்களில் மஸ்ஜிதுகளைக் கட்டுவதும், அதற்கு 'இமாம், முஅத்தின்' ஆகியவர்களை நியமிப்பதும், வழக்கமாகவிருந்தது. ஜனங்களுக்கு மதசம்பந்தமான கொள்கையையும், மத அநுஷ்டானங்களையும் கற்றுக்கொடுப்பது இமாமுடையவும், முஅத்தினுடையவும் வேலையாயிருந்தது. மேலும், மஸ்ஜிதுகளில் குர்ஆன் ஷரீபை ஓதிக்கொடுப்பதோடு அரபிக்கல்வியைக் கற்பிப்பதும், கட்டாயமாகவிருந்தது. இக்கல்வி ஸ்தாபனங்களே, ஏக தெய்வ கொள்கையைப் பரவச்செய்தற்குரிய பிரசாரகரை உற்பத்திசெய்யும் ஸ்தாபனங்களாக விருந்தன. முற்காலத்தைச்சார்ந்த அக்கல்விஸ்தாபனங்களைப்போல், அவைகளுக்குப் பிறகு ஏற்பட்ட கல்விஸ்தாபனங்கள் நல்ல மதப்பிரசாரகரை யுண்டு பண்ணத்தக்கதாக விருக்கவில்லை.

இஸ்லாமிய ஆரம்பகாலத்து முஸ்லிம்கள், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் நற்போதனையின் மூலமாய் உயர்பதவியைப் பெற்றிருந்தனர். வழக்கவொழுக்கம், அநுஷ்டானம், முதலியவைகளில் ஸஹாபாக்கள் அதிசிரேஷ்டமான நல்லுருவைக்கொண்டிருந்தனர். ஆகவே, ஜெயிக்கப்பட்ட பிரஜைகள் அம்முஸ்லிம்களின் நடைநொடி அநுஷ்டானம், வழக்கவொழுக்கம் ஆகியவைகளைக் கண்ணுற்று, அதி ஆவலோடு இஸ்லாம் என்னும் உண்மை மதத்தைத் தழுவிக்கொண்டிருந்தார்கள். இஸ்லாமியவராம்பகாலத்து அரபியர்களின் நற்குணமானது, பிறரைத்தாமாகவே இஸ்லாம் மதத்தைத் தழுவும்படி தூண்டிற்று. முஸ்லிம்களைக் கண்ணுறும் முஸ்லிம் அல்லாதோர், இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொள்ளுவதிலேயே தங்களுக்கு க்ஷேமமுண்டென்று எண்ணினார்கள்.

ஜெயிக்கப்பட்ட தேசத்தை ஆளும் நிர்வாகிகளும், மற்ற உத்யோகஸ்தர்களும் அரபியைத் தாய்பாஷையாய்க் கொண்டிருந்ததோடு, அரசாங்கபாஷையும்அரபியாகவிருந்தது. ஆகவே,பட்டினவாசிகளும், கிராமத்தவரும் அரபி பாஷையைக் கற்கக் கருதினார்கள். மேலும், குர்ஆன்ஷரீபு அரபிபாஷையாக விருந்ததால், அதையும் கற்கவாரம்பித்தனர். குர்ஆன்ஷரீபைக்கற்றுக் கொள்வதற்கான கல்விஸ்தாபனங்கள் ஏராளமாகவிருந்தன. இமாம், முஅத்தின் ஆகியவர்களைத்தவிரவும், மஸ்ஜிதுகளில் பல ஸஹாபாக்கள் மஸ்ஜிதின் ஏதேனுமொரு மூலையில் வீற்றிருப்பார்கள். இவர்களைச் சூழ கணக்கற்ற மாணவர்கள் வீற்றுக் கல்விகற்பார்கள். கிலாபத்தின் மூலமாய் சம்பளங்கொடுத்து நிய

மிக்கப்டும் "முப்தீ," "காஸீ" ஆகியவர்களைத்தவிர, இவர்கள் சம்பள மின்றி பிரத்தியேகமாய் மதசேவை புரிவோராக விருந்தனர்.

மதக்கல்வி, அரபிக்கல்வி ஆகியவைகளைக் கற்க எல்லா சௌகரி யங்களும் ஏற்பட்டிருந்தன. மேலும், முதன் முதலாக குர்ஆன் ஷரீபு, ஹதீதுஷரீபு ஆகியவைகளைக் கற்பிக்கப்பட்டு வந்தன.

தூரதேசங்களில் இஸ்லாம் மதத்தைத் தழுவுவோர் அரபிபாஷை யைக் கற்பதோடு, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர் களின் சொற்செயல், வழக்கவொழுக்கம், நடைநொடிபாவனை ஆகிய வைகளை அறிய ஆவலுள்ளவர்களாக விருந்தார்கள். நாயகம் ஸல்லல் லாஹு அலைஹிவஸ்ல்லம் அவர்கள் கொண்டுவந்த மதம், மற்ற மதங்களின்மீது ஆதிக்கஞ்செலுத்தக் கூடியதாயும், நாயகம் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஆட்சி முழு உலகத்திலுமுள்ள ஆட்சியை யடக்கக்கூடியதாயும் இருந்தமையால், நாயகம்ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வரலாற்றை ஒரு சாதாரண மனிதன் எடுத்துக்கூற வாரம்பித்தாலும், அதைச்செவியுற ஆயிரக்கணக்கான வர்கள் கூடிவிடுவார்கள். பொதுமக்களின் எல்லையற்ற பேராவலே ஹதீது ஷரீபைச் சார்ந்த கல்வியை உலகில் தோன்றச்செய்தது.

'பனீ உமையாவைச்சார்ந்த கலீபாவாகிய' உமர்இப்னு அப்துல் அஜீஸ் அவர்கள், ஹதீது ஷரீபின் கல்வியை ஒழுங்கான முறையில் அமைக்கவாரம்பித்ததும், இஸ்லாம்மதத்தை ஏற்றுக்கொள்ளும் படி கடிதம் எழுதி, இந்தியாவின் சில ராஜாக்களையும், முஸ்லிமாகச் செய்துகொண்டார்கள்.

'கிலாபத்தெராஷிதா'வின் அரிய நற்காலத்தில், குர்ஆன் ஷரீ பையும், ஹதீதுஷரீபையும் கற்பிப்பதற்காக ஏற்பட்ட கல்விச்சாலை களின் மூலமாய், சொற்ப காலத்திலேயே வேறு பிரத் தியேகமான முயற்சியின்றி, எல்லாப் பிரஜைகளும் இஸ்லாம் மதத் தைத் தழுவிக்கொண்டார்கள். மேலும், அரபிபாஷையும் அவர்களின் சொந்த பாஷையைப்போலாயிற்று.

'கிலாபத்தெராஷிதா'வின் காலத்திலேயே, கீழ்த்திசையில், மக் ரான், கிர்மான், சீஸ்த்தான், குராஸான் முதலிய தேசங்களும், வட திசையில் ஆஜுர் பாய்ஜான், காகேசியா, ஹலப், அந்தாக்கியா முதலியவைகளும் மேலதிசையில் ஆப்ரிக்காவின் எல்லையாகிய அல் ஜேரியா வரையிலும், குர்ஆன் ஷரீபையும், ஹதீது ஷரீபையும், அர பிபாஷையையும் கற்பிக்கப்படும் மதரஸாக்கள் ஏற்பட்டிருந்தன.

'கிலாபத்தெராஷிதா'வின் சிறப்புற்ற காலத்திற்குப் பின்னர், பனீ உமையாக்களின் ஆட்சி ஆரம்பமாயிற்று. பனீ உமையாக்களின்

காலத்திலும், கல்விஸ்தாபனங்கள் 'கிலாபமெராஷிதா' வின் காலத்திய கல்விஸ்தாபனங்களேயே முற்றும் பின்பற்றியதாக விருந்தன. ஆனால், பனீ உமையாவைச் சார்ந்த கலீபாக்களும், தேசத்தலைவர்களும், 'கிலாபமெராஷிதா' வைச்சார்ந்த கலீபாக்களின் உறுதி, ஆடம்பரமற்ற வாழ்க்கை ஆகியவைகளை யிழந்து விட்டனர். ஆகவே, 'பனீ உமையா' வின் ஆட்சி காலத்தில் அரபியர்களே அரசர்களாக விருந்தார்களாயினும், அவர்களிடத்து அரசாங்க பெருமையும், டாம்பீகமும் உற்பத்தியாகி விட்டன. பனீஉமையாக்களைச் சார்ந்த கலீபாக்கள், சுயநலம், ஆடம்பரம், உல்லாஸ வாழ்க்கை முதலியவைகளில் சிக்குண்டு சத்தியப்பிரசாரத்தை மறந்து விட்டனர். ஆனால், 'கிலாபமெராஷிதா' இட்ட அஸ்திவாரமானது, இஸ்லாமுக்கு ஒய்வின்றி சதாஜெயத்தையளித்து வந்தது. 'பனீ உமையா' வைச்சார்ந்த கலீபா "உமர் இபுனு அப்துல் அஜீஸ்" அவர்கள் 'கிலாபமெராஷிதா'வின் கீர்த்திவாய்ந்த நற்காரியங்கட்குப் புத்துயிரளித்து, உலகில் சத்தியப்பிரசாரம் புரிந்தார்கள். ஆயினும், சில வருடங்களுக்குள்ளேயே கலிபா அவர்கள் மரணமடைந்து விட்டதால், கலீபா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டிருந்த நற்காரியம் நின்று போயிற்று.

முற்காலத்து கலீபாக்களின் காலத்திலேயே இந்தியாவில் சிந்து தேசத்தில் இஸ்லாம் தோன்றிற்று. சிந்துதேசத்தில் அரபியர்கள் ஏராளமாய் வசித்து வந்தனர். இவர்கள் மதஸம்பந்தமான பிரசாரம் புரியவில்லையாயினும், இவர்கள் ஜனங்களிடத்தில் சாதாரணமாய்ப் பழகிவருவதே இஸ்லாம் மதபிரசாரத்திற்குரிய அந்தஸ்தைப் பெற்றிருந்தது.

ஹிஜ்ரீ 2-வது நூற்றுண்டின் இறுதியிலும், 3-வது நூற்றுண்டின் ஆரம்பத்திலும், முல்தான், மன்சூரா ஆகியவிடங்களில் 'ஹதீது ஷரீபு' 'பிக்ஹு' ஆகியவைகளைக் கற்பிக்கக்கூடிய பற்பல பெரும் கலாசாலைகள் ஏற்பட்டிருந்தன. அக்கலாசாலைகளில் எண்ணிறந்த மாணவர்கள் அரபிக்கல்வியையும், ஏகதெய்வக் கொள்கையின் அறிவையும் பெற்று வந்தனர். அவ்வமயமிருந்த அரபியர் இஸ்லாமிய பிரசாரத்தில் பற்றில்லாதிருந்தனர். ஆயினும், 'கிலாபமெராஷிதா' ஸ்தாபித்திருந்த ஒழுங்கு முறைகள் ஓரளவு தாமாகவே அபிவிருத்தியடைந்துவந்ததால், இன்று ஸிந்துமாகாணத்தில் முஸ்லிம்கள் ஏராளமாக விருக்கின்றனர். 'பனீ அப்பாஸியா' க்களின் ஆட்சி க்ஷீணித்துப் போன பின்னர், சிந்து தேசத்திலிருந்த இஸ்லாமிய ஆட்சியானது முதலாவதாக 'தைலமீ' களின் ஸ்வாதீனத்திலும், இரண்டாவதாக,

'காராமிதா'க்களின் ஸ்வாதீனத்திலும் இருந்து, கடைசியாய் எகிப்திய ஆட்சிக்குட்பட்டது. ஹிஜ்ரீ 5-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் "மஹ்மூத்கஜ்னவி" ஸிந்து மாகாணத்தின்மீது போர் தொடுத்தார். சிந்து தேசத்து ஜனங்களுள் பெரும்பான்மையோர் முஸ்லிம்களாக விருந்தார்களாயினும், அவர்கள் எல்லோரும் "இஸ்மாயீலீ" என்னும் வகுப்பைச் சார்ந்தவரா யிருந்தனர்.

மஹ்மூது கஜ்னவியின் போர்முழக்கத்தோடு இந்தியாவில் மறு முறை இஸ்லாம் தோன்றிற்று. மஹ்மூது கஜ்னவியின் நோக்கம், இஸ்மாயீலீவகுப்பு முஸ்லிம்களையழிப்பதும், விக்கிரக ஆராதனையைத் தடுப்பதுமட்டுமாகவிருந்தது. இஸ்லாம் மதபிரசாரத்தைச்செய்வதை விட மஹ்மூது கஜ்னவி, தம் "கர்ராமீ" கொள்கையைப்பரத்துவதி லேயே கவனம் செலுத்திவந்தார். மஹ்மூது கஜ்னவி, அபூ முஹம்மது கர்ராம் அவர்களின் கொள்கையை யாதரிப்பவராயும், 'அஷாயிரா, ஷாபிய்யா' ஆகியவைகளின் பகைவராயுமிருந்ததோடு ஹபியா வுக்கும், ஹனபீமதஹபைச் சார்ந்த உலமாக்களுக்குங்கூட பெரும் பகைவராகஇருந்தார். முஸ்லிம்களின்மீது அநியாயத்தைப்புரிவது,இந்துக்களின் தேசங்களைக் கைப்பற்றுவது, விக்கிரக ஆராதனையைத் தடுப்பது ஆகியவைகளே மஹ்மூதுகஜ்னவியின் வாழ்க்கையைச்சார்ந்த முக்கியமான காரியங்களாகவிருந்தன. ஆகவே, மஹ்மூதுகஜ்னவியின் நடவடிக்கைகள் முற்காலத்து கிலாபத் ஆட்சிகளால் அங்கீகரிக்கத்தக்கன வாயில்லை. மேலும், இஸ்லாமிய பிரசாரத்தின் உண்மையான ஒழுங்கு முறையை மஹ்மூது கஜ்னவீ அறிந்திருக்கவில்லை. ஆகவே, மஹ்மூது கஜ்னவியை, இந்தியா அருவருத்துக் கொண்டிருந்தது. இவருக்குப் பின்னர் தோன்றிய ஜெயசீலர்களும், தேசங்களைக் கைப்பற்றுவதை மட்டும் தொழிலாய்க் கொண்டிருந்ததோடு, முஸ்லிம்களென்னும் முறையில் அவர்களிடை இஸ்லாமிய வாடையுமிருந்தது. அவர்கள் மஹ்மூது கஜ்னவியைப் போன்றவர்களாயில்லா திருப்பினும், அவர்கள் புரிந்த யுத்தங்கள் இஸ்லாம் மதத்தைச் சார்ந்த 'ஜிஹாதா'கவிருக்கவில்லை. அவர்கள் தங்களின் ஏகதேச்சாதிகார வன்மையை நிலை நிறுத்துவதற்காகவேயன்றி, இஸ்லாம் மதப்பிரசாரத்தைப்புரிய வேண்டு மென்பதற்காக வாளாயுதத்தைத் தாங்கினவர்களல்ல.

ஹிந்துக்கள் அடங்கிய பின்னர், இந்தியாவிலேற்பட்ட முஸ்லிம்களின் ஆட்சிகள் ஒன்றேடொன்று போர்புரிய வாரம்பித்தன. இந்த யுத்தங்களின் முடிவாக, இந்தியாவில் மொகலாய ஆட்சி ஏற்பட்டது. மொகலாய ஆட்சியைச் சார்ந்த ஆரம்பத்தில் இரண்டு அரசர்களின் காலம், முழு இந்தியாவையும் இவ்வாட்சிக்குட்படுத்து

வதிலேயே செலவாயிற்று. அக்பர் சக்கரவர்த்தியின் காலத்தில் ஒரு புதிய மாறுதல் தோன்றிற்று. அக்பர் சக்கரவர்த்தி, முஸ்லிம்களின் மற்ற ஆட்சிகள் ஒழிந்த பின்னர், ஹிந்து முஸ்லிம் 'ஷீஅ்' ''ஸுன்னி,'' 'பார்ஸி', 'கிறிஸ்து; ஆகிய கொள்கைகளை ஒன்று படுத்தி ஒரு புதிய சீர்திருத்தத்தை இயற்றினர். உலமாக்களை மூலை களில் ஒதுங்கும்படிச் செய்து, தேசம் அக்பரின் நாஸ்திகக் கொள் கைக்கு இரையாகும்படிச் செய்யப்பட்டது.

இந்தியாவில் இருந்த அரபிய ஆட்சி ஒழிந்த பின்னர், இந்தி யாவில் இஸ்லாமியக்கல்வி அபிவிருத்தி யடையவுமில்லை. இஸ்லாம் மத அபிவிருத்தியைச்சார்ந்த காரியங்கள்நடைபெறவுமில்லை. இந்தியாவில் இறுதியாக விருந்த முஸ்லிம் அரசர்கள் பார்ஸியைத் தாய்பஷைபாய்க் கொண்டிருந்தார்களாதலின், பார்ஸி பாஷையே அரசாங்க பாஷையா கவுமிருந்தது. ஆகவே, அரபிபாஷை அபிவிருத்தி யடையக்கூட வில்லை. அரபிபாஷைமட்டும் இந்நாட்டில் போதிய அளவு அபி விருத்தி யடைந்திருக்குமாயின், அப்பாஷையானது, பிறமதஸ்தர்கள் தாமாகவே இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொள்ளும்படிச் செய்திருக் கும். ஜனங்களின் மதத்தலைவராகவும், முப்தீகளாகவும், உலமாக் களாகவும் இருக்கவேண்டி மட்டும் சிலர் சிறிது அரபிபாஷையைக் கற் றுக்கொள்வது வழக்கமாயிருந்து வந்தது. இவர்களுள் பெரும்பான் மையோர் அரபியர்களிடம் பேசமுடியாமலிருப்பார்கள். இன்று இந் துக்கள் அந்நியரின் தூண்டுகோலுக்குட்பட்டு எத்தகைய ஆதாரமு மின்றி, இஸ்லாம் வாளாயுதத்தால் பரவிற்றென்று கூறுகின்றனர். 'கிலாபதெராஷிதா,' 'கிலாபதே பனீ உமையா,' 'கிலாபதெ அப் பாஸியா' ஆகிய மூன்று ஆட்சிகாலத்திலும் இஸ்லாம் வாளாயுதத் தால் அபிவிருத்தி செய்யப்பட்டதென்பதற்கு ஒரு ஆதாரத்தையே னும் எடுத்துக்காட்ட வியலாது. இந்தியாவில் இரண்டொரு அரசர் களைத்தவிர, மற்றெல்லா முஸ்லிம் அரசர்களும், இஸ்லாமிய ஆரம்ப காலத்தின் 'கிலாபத்து' ஆட்சியைப் பின்பற்றி ஆட்சிபுரியவேயில்லை. இந்தியாவை ஆட்சிபுரிந்த முஸ்லிம் அரசர்கள் தங்களின் குடிகள் இந்துக்களாகவே யிருப்பின், தங்களாட்சிக்கு அதிக சௌகரியமாக விருக்குமென்று எண்ணியிருந்தனர். முஸ்லிம் சிப்பாய்கள் அல்லது படைத்தலைவர் இந்துபிரஜைகளின் மீது சிற்சில அனியாயங்களைச் செய்திருப்பது உண்மையே. சரித்திரத்தின் ஏடுகளை அதி கவனத் தோடு புரட்டிப் பார்ப்போமாயின், முஸ்லிமல்லாத பிரஜைகட்குத் துன்பமிழைத்தோர் கொடுந் தண்டனைக்குட் பட்டிருக்கின்றன ரென் பது புலனாகும்.

இந்தியாவில் முஸ்லிம்களின் ஆட்சி இஸ்லாம் மதத்தைப் பின்பற்றிய தாகவாவது, இஸ்லாமிய பிரசாரத்தைச் செய்யக்கூடியதாக வாவது இருந்ததேயில்லை. எண்ணிறந்த இந்துக்கள் தாமாகவே இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொண்டனர். (ஸூபீ)

இஸ்லாமும் சுயேச்சையும்

(இமாமுல் ஹிந்து மௌலானா அபுல்கலாம் ஆஜாத்
அவர்கள் எழுதியது)

(376 - வது பக்கத் தொடர்ச்சி)

மேற்கூறிய அறிக்கை வெளியிடப்பட்ட காலத்தில் அரசாங்கத்திற்கு அவசியமான சட்டதிட்டங்கள் தேசீய சபையாரால் ஏற்பட்டிருக்கவில்லை. ஆகவே, ப்ரான்ஸ் தேசத்து ஜனநாயக ஆட்சிக்கு வேண்டிய சட்டதிட்டங்களை யியற்றுவதற்காக ஒரு சபை ஸ்தாபிக்கப்பட்டது. இச்சபையானது சட்டங்களை யியற்றுவதற்குமுன் சுயேச்சைக்குரிய சில ஒழுங்கு முறைகளை பீடிகையாகத்தயாரித்தது. இவ்வொழுங்கு முறையை எல்லா சட்டதிட்டங்களினுடையவும் அடிப்படையென இச்சபை தீர்மானித்திருந்தது. சுயேச்சைக்குரிய இப்பீடிகையை வரைந்து, இதுவும் விளம்பரரூபமாக அச்சிட்டு பிரசித்தப்படுத்தப்பட்டது.

மேல் நாட்டில் மானிட உரிமையைச் சார்ந்த விளம்பரம்.

மேற்கூறப்பட்ட அறிக்கையின் சாரமாவது:—

மானிடர் ஜீவித்திருப்பது சுயேச்சைக்காகவே. மானிடர் என்னும் முறையில் எல்லோருக்கும் சமஉரிமையே உண்டு.

சுயேச்சை, சுதந்திரம், அமைதி, எதிர்ப்பு ஆகிய இந்நான்கும் மானிடரின் இயற்கையான உரிமைகளாகும்.

சுயேச்சை

சுயேச்சை என்பது பிறருக்கு நஷ்டமில்லாத முறையில் எதையும் செய்வதற்கு மானிடர் சக்திபெற்றிருப்பதாகும்.

சுதந்திரம்

ஒவ்வொருமானிடரும் தன் சொத்துகளுக் குரியவராக விருக்க வேண்டும். அதை எவரும் கைப்பற்றிக்கொள்ள முடியாதிருக்கவும் வேண்டும். சட்டப்படியும், நியாயமாயும் தன் சொத்தை வைத்திருக்கவும் பராதீனஞ் செய்யவும் ஒவ்வொரு மானிடருக்கும் பூரண உரிமையிருந்து வரவேண்டும்.

அமைதி

ஒவ்வொரு மானிடரும் தனக்குச் சொந்தமான இடத்தில் எத்தகைய அச்சமுமின்றி பாதுகாத்துக்கொள்ளத்தக்க உரிமையே அமைதியென்பதின் லக்ஷியமாகும். சட்டவிரோதமாய் நடந்துகொள்வதுமட்டுமே ஒருவனுக்குரிய அமைதியைப் பாதிக்கக்கூடும்.

எதிர்ப்பு

அநியாயம், துர்க்கிருத்தியம், போர், நியாயமின்றிமுன்னேறுவது ஆகியவைகளைத் தடுத்துக்கொள்வதே, எதிர்ப்பு என்பதின் பொருளாகும். அஃதாவது ஒவ்வொருவனும் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு வேண்டிய, சவுகரியங்களைத் தேடிக்கொள்ளச் சக்தியிருக்க வேண்டும்.

பொதுமக்களின் அபிப்பிராயமே சட்டமாகும். ஒவ்வொரு தேசவாசிக்கும் நேர்முகமாகவோ, அன்றி வக்கீல் மூலமாகவோ Senate என்னும் சபையில் பிரவேசிக்க உரிமை யிருக்கவேண்டும். ஒவ்வொரு தேசவாசியும் அவன் தேசத்தவனென்னும் முறையில், ஒரே விதமான சட்ட திட்டங்களுக் குட்பட்டவனாக விருக்கவேண்டும். ஆகவே, பெரிய உத்தியோகங்களையும், பெருந்தொகையான சம்பளங்களையும் அவனவனின் சாமர்த்தியத்திற் கேற்றவாறே பெற ஒவ்வொருவனுக்கும் இடமளிக்கப்பட வேண்டும். சட்ட சம்மதமில்லாமலும், சட்டத்திற்குட்பட்ட தீர்ப்பைப் பெறாமலும் எந்த மானிடரையும் பிடித்து வைக்கவோ, அல்லது இத்தகைய வேறு காரியத்தைச் செய்யவோ எச்சந்தர்ப்பத்திலும், எவருக்கும் அதிகார மிருக்கக்கூடாது. எவனும் தன் அபிப்பிராயத்தை வெளியிடாதவாறு எவரும் தடுக்கக் கூடியவராக விருக்கக் கூடாது. மத சம்பந்தமான அபிப்பிராயமாயினும் சரி, மதக் கொள்கையைச் சார்ந்த பொதுவான அபிப்பிராயமாக விருந்தாலும் சரி, பொது அமைதிக்குக் கேடிழைப்பதாக இல்லாதவரை அவ்வபிப்பிராயங்களை வெளியிட ஒவ்வொருவரும் உரிமை பெற்றிருக்க வேண்டும். தன் எண்ணம், அபிப்பிராயம் ஆகியவைகளுக்கேற்ப பேசவும், எழுதிப்படிக்கவும், அச்சிட்டு வெளியிடவும் ஒவ்வொருவனுக்கும் பூரண உரிமையுண்டு.

சுதந்திரமென்பது ஒரு தூய்மையான உரிமையாகும். ஒருவனுக்குரிய சுதந்திரத்தை மற்றெவனும் கைப்பற்றிக்கொள்ள முடியாதிருக்க வேண்டும். பொது நன்மைக்கு வேண்டிய அவசியமானவைகளை முதன் முதலாக கவனிக்கவேண்டியதேயாயினும், சட்ட சம்மதமான

முறை யிடந்தராதவரை யெவரும் தன் சுதந்திரத்தை விட்டுவிடும் படிக் கட்டாயப் படுத்தப்படலாகாது.

அதிகாரம், ஆதிக்கம், செல்வாக்கு ஆகியவைகளைச்சார்ந்த உரிமையானது சமூகத்திற்கும் தேசத்திற்கு முண்டேயன்றி அவைகளில் குறிப்பிட்ட நபர்களுக்குக் கிஞ்சிற்றும் பாத்தியதையிருக்கக் கூடாது, என்பது இன்றைய மாறுதலுக்குரிய கிளர்ச்சியின் பீடிகையான லக்ஷியங்களைச் சார்ந்ததாகும். தேசமக்களெல்லோரும் எல்லா உரிமைகளிலும் சமத்துவமானவர்களா யிருக்கவேண்டும். சுயேச்சையின் பயனையனுபவிப்பதிலும் சமத்துவமே நிலவியிருக்கவேண்டும். ஆகவே, ப்ரான்ஸியரின் பழக்க வழக்கங்கள் சுயேச்சை, சமத்துவம், சகோதரத்வம் ஆகியவைகளை அடிப்படையாய்க் கொண்டனவாக விருக்க வேண்டும்.

மேல்நாட்டின் இன்றைய ஜனநாயக தத்துவத்தின் பீடிகை ப்ரான்ஸ் வெளியிட்ட மேற்கூறிய அறிக்கையேயாகும். இவ்வறிக்கை மானிட சுயேச்சைக்குரிய விளம்பரம் என்று சரித்திரம் நாமஞ் சூட்டி பாதுகாத்ததோடு, சதா பாதுகாத்தும் வருமென்பது உண்மை.

(தொடரும்)

நஜ்த்சுல்தானும் வாக்கு மாறுட்டமும்.

சொல்வதொன்று செய்வதொன்று?

ஔத் மாகாண கிலாபத் கமிட்டியின் தலைவரான மௌலானா "அப்துல் மாஜித்" தர்யாபாதி, அவர்கள் எழுதியது:—

"நஜ்த் சுல்தானை" ஆதரிப்பவர்களுள் முழு இந்தியாவிலும், இன்று அமரத்ஸர்வர்சியாகிய மௌலானா தனுவுல்லாஹ் சாஹிப், அவர்களே முன்னணியில் நிற்பதாகத் தெரிகின்றது.

2-வருடங்கட்குமுன் மௌலானா அவர்கள், தம் பத்திரிகையில் வரைந்திருந்ததாவது:—"பரிசுத்தமான ஹிஜாஸ் தேசத்தைக் கைப் பற்றிக் கொள்ளவேண்டு மென்னும் எண்ணத்தை நான் கொண்டிருக்கவில்லை. இந்நாட்டை ஆளத் தகாதவர்களின் ஸ்வாதீனத்திலிருந்து மீட்டு, அதை முஸ்லிம் உலகப் பிரதிநிதிகளின் ஸ்வாதீனத்தில் விட்டுவிடும் பொருட்டு, முஸ்லிம் உலகத்தை ஹிஜாஸுக்கு அழைப்பேன்" என்னும் விளம்பரத்தை நஜ்த் சுல்தான் தம் ஏஜண்டின் மூலமாய், விடுத்துள்ளார்." (அஹ்லெஹதீது, 2-10-1924.)

சில மாதங்களுக்குப் பின்னர், மௌலானா அவர்கள் கூறியதாவது:— "மக்கமாநகரைச் சார்ந்த ஊழியத்தைப் புரிவதில், எல்லா முஸ்லிம்களும் சமமான உரிமையைக் கொண்டிருக்கவேண்டும், என்று உலக முஸ்லிம்கள் பொதுவாகவும், இந்திய முஸ்லிம்கள் குறிப்பாகவும், அறிவுறுத்தி வரும் கோரிக்கையையே நஜ்தியர் அடுத்தடுத்து வெளியிட்டு வருகின்றனர். நஜ்த் சுல்தானவர்களும் மக்கமாநகரில் புரிந்த ஒரு பிரசங்கத்தின் இறுதியில் இத்தகைய கருத்தையே பகிரங்கப் படுத்தியுள்ளார்கள்." (அஹ்லெஹதீது, 30-1-1925.)

மௌலானா அவர்கள் மீண்டும் கூறிய சாக்ஷியமாவது:—"அநியாயக்காரர்களின் கரத்திலிருந்து ஹிஜாஸ் தேசத்தை மீட்டு, முஸ்லிம் உலகத்தின் ஸ்வாதீனத்தில் ஒப்புவிப்பதற்காக நான், அந்நாட்டில் பிரவேசித்தேனேயன்றி, ஹிஜாஸை ஆட்சி புரிவதற்காகவல்ல" என்று "நஜ்த் சுல்தான் அவர்களால் செய்யப்பட்டுள்ள வாக்கை சுல்தான் அவர்கள் இன்னமும் கடைப்பிடித் தொழுகி வருகின்றார்கள்." (அஹ்லெஹதீது, 29-5-1925.)

1925-வது வருடம் டிஸம்பர் மாதத்தில், ஹிஜாஸின் பிரச்சினையையொட்டி மௌலானா அவர்கள் வரைந்துள்ள புத்தகத்தில், ஹிஜாஸின் ஊழியத்தை யாரிடத்தில் ஒப்புவிக்க வேண்டுமென்று வினவி, மேலே வரைந்துளதாவது:—

"குறிப்பிட்ட நபருடையவாவது, அல்லது குறிப்பிட்ட சமூகத்தினுடையவாவது ஆட்சி ஹிஜாஸில் ஏற்படக் கூடாதென்றும், இஸ்லாமிய உலகத்து முஸ்லிம்களெல்லோரும் ஊழியம் புரியத்தக்க ஜனநாயக ஆட்சியை ஹிஜாஸில் ஸ்தாபிக்க வேண்டுமென்றும், ஜனநாயக தத்வத்தின் எதிரிகள் இன்று வற்புறுத்தி வருகின்றனர். ஆனால், எதிரிகள் கூறும் இவ்வார்த்தையானது, உண்மையில் சுல்தான் "இபுனுசஊத்" அவர்கள் வெளியிட்ட யோசனையைச் சார்ந்ததேயாகும். "ஹிஜாஸை ஆட்சிபுரிய வேண்டுமென்று நான் கருதவில்லை. துர்க்கிருத்தியர்களின் அக்கிரமங்களை விட்டு ஹிஜாஸைத் தூய்மைப் படுத்துவதற்காகவே, ஹிஜாஸைக் கைப்பற்றும் பொருட்டுச் செல்லுகிறேன். ஆகவே, ஹிஜாஸ் கைப்பற்றப்பட்ட பின்னர், முஸ்லிம் உலக மகாநாட்டைக் கூட்டி, அம் மகாநாடு ஏற்படுத்தும் சட்ட திட்டங்களுக் குட்பட்டே ஹிஜாஸின் நிர்வாகம் நடைபெறவேண்டும்," என்னும் விளம்பரத்தை நஜ்த் சுல்தானவர்கள், ஹிஜாஸைக் கைப்பற்ற வேண்டுமென்று கருதியவன்றே வெளியிட்டுள்ளார்கள்" என்பதே.

நஜ்த் சுல்தானவர்களை ஆதரிக்கும் இந்திய மகான்களுள், மௌலானா ஜபர் அலிகான் சாஹிப் அவர்கள், மௌலானா தனுவுல்லாஹ்வுக்கு அடுத்தபடியிலிருக்கின்றார்கள். ஆதலின், மௌலானா ஜபர் அலிகானவர்களைப் பற்றி சில வார்த்தைகள் கூற வேண்டியிருக்கிறது. 1924-வருடம் டிஸம்பர் மாதத்தில் பஞ்சாப் மாகாண கிலாபத் கமிட்டியின் மகாநாடொன்று நடை பெற்றது. அம்மகாநாட்டிற்கு மௌலானா அவர்கள் அக்கிராஸனராக விருந்தார்கள். "கைர்முகல்லித்" என்று சொல்லிக்கொண்டு நஜ்த் சுல்தானின் 'முகல்லி' தாக விருக்கும் பல கனவான்கள், அம் மகாநாட்டில் பிரஸன்னமா யிருந்தார்கள்.

அம் மகாநாடு ஏகமனதாய்ச் செய்த தீர்மானமாவது:—"முஸ்லிம் உலக மகாநாடு ஆலோசனை கூறியவாறு "குலபாயெராஷிதீன்" களின் முன் மாதிரியான நடவடிக்கைகளுக் கேற்ப ஹிஜாஸ் என்னும் பரிசுத்த பூமியில் ஒரு ஆட்சியை யேற்படுத்தவேண்டும்; "ஹிஜாஸில் தம்முடையவாவது, மற்ற நபர்களினுடையவாவது, ஆட்சியை ஸ்தாபிக்க வேண்டு" மென்று கருதாமல், "பரிசுத்தஸ்தலத்தை ஷரீபின் ஆட்சியிலிருந்து மீட்டு எல்லோரும் இஸ்லாமிய ஷரீஅத்துக்குத் தலைவணங்கும்படி செய்வதோடு, ஹிஜாஸின் நிர்வாகத்தை முஸ்லிம் உலக மகாநாட்டின் அபிப்பிராயத்திற்கு விட்டுவிடக் கருதியிருப்பதாக, நஜத் சுல்தான் அவர்கள் ஆரம்பமுதல் இதுவரை இடைவிடாது அறிக்கை வெளியிட்டு வருவதை முன்னிட்டு; சுல்தானவர்களுக்கு இம் மகாநாடு நன்றி நிறைவேற்றுகின்றது." என்பதே.

முஸ்லிம் உலகமகா நாடு கூட்டப்படு மென்றும், அம்மகாநாட்டின் மூலமாகவே ஹிஜாஸை நிர்வகிக்கப்படுமென்றும் நஜ்த் சுல்தான் அவர்கள் செய்துவந்த விளம்பரங்கள் ஜமீன்தாருக்கு அதிக நம்பிக்கையை யளித்திருக்கலாம். மௌலானா ஜபர் அலிகான் அவர்கள் ஜமீன்தாரில் வரைந்திருப்பவைகளாவன:—

(1) ஜித்தாவைக் கைப்பற்றிய பின்னர் தாமதமின்றி மக்கமாநகரில் முஸ்லிம் உலகமகாநாட்டைக் கூட்டி ஹிஜாஸின் வருங்காலத்தை முன்னிட்ட விஷயங்களைத் தீர்மானிப்பதே முஸ்லிம் உலகின் முதற் காரியமாகவிருக்க வேண்டும். ஹிஜாஸின் வருங்கால நிர்வாகம் எவ் வடிவத்தைக் கொண்டதாக விருக்கவேண்டுமென்பதை ஆலோசித்து அம்மகாநாடு தீர்மானிக்கவேண்டும். பொதுஜன வபிப்பிராயம், ஜனநாயக தத்துவத்தைக் கோருவதாகவே யிருக்கின்றது. சுல்தான் இப்னுசுஊத் அவர்கள் ஹிஜாஸில் விஷய ஆலோசனைச் சபையை ஏற்

படுத்தி ஜனநாயக தத்துவக் கொள்கையைப் பின்பற்றி வேலைசெய்ய வாரம்பித்து விட்டார்கள். (ஜமீன்தார், 3-9-1925.)

(2) "ஹிஜாஸில் ஜனநாயக ஆட்சி ஏற்படவேண்டுமென்றே நாம் கோறுகிறோம். எதேச்சாதிகார ஆட்சி ஹிஜாஸில் ஏற்பட்டு விடக்கூடாது. முழு இஸ்லாமிய உலகமும் சேர்ந்து இஸ்லாமிய ஒழுங்கு முறைப்படி முஸ்லிம்களின் லக்ஷியத்தை யடையத்தக்க ஆட்சியையே, ஹிஜாஸில் ஸ்தாபிக்கவேண்டும்." ("ஜமீன்தார்," 10-10-1925.)

(3) "நம் கோரிக்கை சித்தி பெறுவதற்கு 'ஜித்தா' சீக்கிரமாய் ஜெயமாக வேண்டும். அதன் பின்னர் நஜ்த் சுல்தானவர்கள் செய்திருக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி சுல்தான் அவர்களை நாம் கேட்டுக்கொள்வோம்." ("ஜமீன்தார்," 11-10-'25.)

"ஹிஜாஸை, சூழ்ச்சிக்காரர்களின் ஆதிக்கத்தை விட்டுப் பாதுகாக்கத்தக்க ஏதேனுமொரு அரசாங்கத்தை இன்று "மௌலானா ஹஸ்ரத் மோஹானீ" காட்ட முடியுமாயின் நாம் நஜ்த் சுல்தானுக்கு உதவி செய்வதை நிறுத்தி ஹிஜாஸை அவ்வரசாங்கத்தின் ஆதிக்கத்திற் குட்படுத்திவிடத் தயாராயிருக்கின்றோம். முஸ்லிம்களின் ஒற்றுமை, சம்பந்தம், கூட்டுறவு ஆகியவைகளை முன்னிட்டு நியாயமற்ற இக்காரியத்தைச் செய்யலாமென்றே கருதுகிறோம்." ("ஜமீன்தார்," 11-10-'25.)

5-12-'24-ல்,மௌலானா ஹாஜி முகமதலியவர்கள் டெல்லிஜுமு்ஆ மஸ்ஜிதில் செய்த பிரசங்கத்தின் மத்தியில் "இபுனுசூஊத் அவர்கள் மக்காமாநகரில் யுத்தத்தை நடத்தி வைத்தபோது, மக்கமா நகரில் அரசாங்கத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்னும் நோக்கம் தமக்கில்லை யென்றும், ஹிஜாஸின் நிர்வாகத்தை யொட்டித் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு உலக முஸ்லிம்களைச் சார்ந்ததென்றும், பகிரங்கமாய் வெளியிட்டிருக்கிறார்கள்; என்று எடுத்துக் காட்டினார்கள்.("ஹம்தர்த்," 7-12-'24.)

எகிப்திலிருந்து 'புவாத்' அரசர் அவர்கள் ஹிஜாஸுக்கனுப்பிய தூதுவர்கள் 1925-வது வருடம் அக்டோபர் மாதம் வெளியிட்ட அறிக்கையில் அடியில் வருமாறு வரையப்பட்டிருக்கின்றது:—

"சுல்தான் இபுனுசூஊத் அவர்கள் ஹிஜாஸைக் கைப்பற்றி ஆட்சி புரியவேண்டு மென்னும் எண்ணம், தமக்கில்லை யென்று பகிரங்கமாய்க் கூறியிருக்கிறார்கள். ஷரீப் வகையாரின் ஆதிக்கத்திலிருந்து ஹிஜாஸை மீட்கவேண்டு மென்பதே சுல்தானின் நோக்கமாகும். முஸ்லிம் உலகம் "புவாத்" அரசரின் தலைமையின்கீழ்

ஒரு விசாரணைக் கமிட்டியை ஹிஜாஸுக்கனுப்பி, ஹிஜாஸ் வாசிகள் தங்களின் நாட்டிற்கு யாரை அரசனாக நியமிக்கக் கருதுகிறார்களென்ப தைத் தெரிந்துகொள்ளட்டும்,என்றும்,சுல்தானவர்கள் கூறுகிறார்கள். (ஹம்தர்த், 15-10-'25.)

மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் கிலாபத்து கான்பரன்ஸின் அக்கிராஸன ரென்னும் முறையில் ஹிஜாஸின் நிர்வாகத்தை யொட்டி பிரசங்கித்ததாக 'ஜமீன்தார்' எழுதியிருப்பதாவது :—

"ஹிஜாஸைத் தம்ஆதிக்கத்திற் குட்படுத்திவிடவேண்டு மென்று சுல்தான் இபுனுசுஊத் கருதியதே கிடையாது. "ஷரீபின் ஆட்சி, அரப்தேசத்திற்குப் பெரும் சங்கடமாக விருக்கிறது. ஆத லின், யான் முஸ்லிமாயும், அரப் வாசியாயும் இருப்பதை முன்னிட்டு அமீரலியை ஹிஜாஸைவிட்டு வெளியேற்றிவிட்டேன். (மேலும்)" என் ஆட்சிக்காலம் முடிவடைந்து விட்ட"தென்று முஸ்லிம் உலகின் உண்மையான பிரதிநிதிக்கூட்டம் எனக் கறிவித்தவன்றே, நான் ஹிஜாஸை விட்டு ஏகிவிடுவேன்" என்று சுல்தானவர்கள் தெளி வாய்க் கூறியிருக்கின்றார்கள்" ("ஜமீன்தார்", 31-12-'25.)

சுல்தான் இபுனுசுஊத் அவர்கள் ஹிஜாஸைத் தமதிஷ்டம் போல் ஆட்சிபுரிய மாட்டார்களென்றும், அதை முஸ்லிம் உலகத்தின் தீர்மானத்திற்கு விட்டு விடுவார்களென்றும் முஸ்லிம் உலக மகாநாட் டைக் கூட்டுவதற்குரிய வழியைச் சுத்தப்படுத்தி வருகிறார்களென் றும், நம்பியே சுல்தானவர்களுக்கு ஜெயமேற்படும் போதெல்லாம் கிலாபத் கமிட்டி சுல்தான் அவர்களைப் பாராட்டி நன்றி நிறை வேற்றி வந்தது.

ஹிஜாஸின் பிரச்சினை சம்பந்தமாய் 1925 - வது வருடம் அக் டோபர் மாதம் கிலாபத் கமிட்டி நிறைவேற்றிய தீர்மானத்தை யொட்டி, மௌலானா ஹாஜி ஷௌகத் அலீ அவர்கள் பேசியதாவது:-
"ஹிஜாஸில் எந்த அரசரும், எந்த அமீரும் ஆட்சிபுரிய முடியாது. இஸ்லாமிய ஒழுங்கு முறைக் குட்பட்ட ஆட்சியே, அந்நாட்டில் இருந்து வரவேண்டும். ஹிஜாஸ் வாசிகளால் தேர்ந் தெடுக்கப்பட்ட சகோதரர்கள் முஸ்லிம் உலக மகாநாட்டின் ஆதரவையும், பாது காப்பையும் பெற்று அவ்வாட்சியை நடத்தி வரவேண்டும். சுல்தான் இபுனுசுஊத் அவர்கள் ஹிஜாஸில் ஆட்சிபுரிய நாம் சம்மதிக்க மாட்டோம்". ("கிலாபத்", 11-9-'25).

'கிலாபத்,' ஹம்தர், ஆகிய பத்திரிகைகளின் தலையங்கங்களின் மூலமாய், மேற்கூறப்பட்டுள்ள கருத்துக்களை எத்தனையோ முறை வற்புறுத்தப் பட்டிருக்கின்றன. கான்பூரில் நடைபெற்ற கிலாபத்

கான்பரன்ஸில் நஜ்த் சுல்தானவர்களைப் பாராட்டி நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தில்:—“ஹிஜாஸின் வருங்கால நிர்வாகத்தைப் பற்றி சுல்தான் இபுனுசுஊத் அவர்கள் வெளியிட்டிருக்கின்ற அறிக்கைகள் பூரண நம்பிக்கையை யளிக்கின்றன. (ஆகவே) முஸ்லிம் உலகம் சுல்தானவர்களின் அழைப்பை அங்கீகரித்து, ஹிஜாஸின் வருங்காலப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்குரிய மகாநாடு அதிசீக்கிரத்தில் நடைபெறும், என்று இந்த கிலாபத் கான்பரன்ஸ் கருதுகிறது,” என்று வரையப்பட்டிருக்கின்றது.

இத்தீர்மானம், மௌலானா ஹுஸைன் அஹ்மத் அவர்களால் பிரேரிக்கப்பட்டு, காஸீ அப்துர் ரஹ்மான், மௌலவி ஜபருல் முல்க், ஆகியவர்களால் ஆமோதிக்கப்பட்டும், ஆதரிக்கப்பட்டும் நிறைவேறியிருக்கின்றது.

சுல்தானின் நண்பர்கள், அபிமானிகள், சுல்தானைப் பின்பற்றுவோர் முதலியவர்கள் கூறியும், வரைந்தும் இருப்பவைகள் தவிர, சுல்தானவர்கள், தாமே செய்திருக்கும் வாக்குறுதிகளிற் சிலவற்றைக் கண்ணுறுவோமாக.

1924-வது வருடம் அக்டோபர் மாதம், மக்கமாநகரைக் கைப்பற்றுவதற்காக சுல்தான் இபுனுசுஊத் அவர்கள் புறப்பட்டபோது பத்திரிகைகளுக்கு அனுப்பிய செய்தியாவது:—“ மக்கமா நகரை என் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்னும் நோக்கத்துடன் நான் புறப்படவில்லை. ஆனால், சுமக்கமுடியாத வரிச் சுமையை விட்டு மக்கமாநகரை மீட்பதற்காகவும், ஷரீபின் அநியாயகரமான ஆட்சியை விட்டு ஹிஜாஸுக்கு சுயேச்சை யளிப்பதற்காகவுமே நான் மக்கமாநகரை நோக்கிச் செல்கின்றேன். மக்கமாநகரில் இனி இஸ்லாமிய ஷரீஅத்துக்குட்பட்ட ஆட்சியே நடைபெறும். அங்கு எவரும் சுல்தானாக விருக்கமுடியாது. ஒவ்வொருவரும் ஷரீஅத்துக்குக் கட்டுப்பட்டே யாகவேண்டும். உலக முஸ்லிம்களின் முக்கிய ஸ்தலமென்னும் சிறப்பும், இஸ்லாமிய உலகின் நடு நாயக ஸ்தலமென்னும் கீர்த்தியும், உயர்வும் மக்கமாநகருக்குண்டு. ஆகவே, முஸ்லிம் உலக அபிலாஷையை அடிப்படையாய்க் கொண்ட ஆட்சியே அந்நாட்டில் நிலைபெறக்கூடும். மக்கமா நகரில் முஸ்லிம் உலக மகாநாடும் நடைபெறும்.” (“அஹ்லெஹதீது”, 5-12-1924.)

மக்கமாநகர் கைப்பற்றப்பட்ட பின்னர் சுல்தான் இபுனுசுஊத் அவர்கள், மக்கமாநகரைச் சார்ந்த முக்கியஸ்தரின் முன்னிலையில் செய்த பிரசங்கமாவது:—

'நஜ்த்' தேசத்தோடு புதிய தேசங்களைச் சேர்க்கவேண்டு மென்பது இந்த யுத்தத்தின் லக்ஷியமல்ல. ஆனால், அல்லாஹு தஆலாவின் தீனை உயர்வுபடுத்த வேண்டுமென்பதே இந்த யுத்தத்தின் லக்ஷியமாகும். அல்லாஹு த ஆலாவின் நாட்டப்படி அதிசீக்கிரத்தில் நம் சைனியம், மக்கமாநகரையும், ஹிஜாஸையும், விட்டுச் சென்றுவிடும். இத்தேசம் உத்தமமான முன்னேற்றத்தை அடையக்கூடிய ஸ்தாபனமொன்று, இந்நாட்டில் ஏற்படுத்தப்படும். அது ஹிஜாஸின் க்ஷேமத்தை யொட்டிப் பொறுப்பேற்றதாயும் முஸ்லிம் உலகின் நம்பிக்கை, நல்லெண்ணம் ஆகியவைகளைத் தாங்கி நிற்பதாயும் இருக்கும். 'நஜ்த்' தேசத்தின் அளவை அதிகப்படுத்த வேண்டுமென்னும் நோக்கம் எமக்குக் கிடையாதென்னும், உண்மையை மீண்டும் உறுதிப்படுத்துகிறேன். சத்தியமும், நியாயமும் உச்சஸ்தானத்தை யடையவேண்டுமென்பதே நம்முடிவான நோக்கமாகும்." ("அஹ்லெஹதீது", 23-10-'25).

மேற்கூறப்பட்டுள்ள வாக்குறுதிகளையும், விளம்பரங்களையும், நம்புவதற்கு ஏதேனும் தடையிருக்க முடியுமா? மேலே வரையப்பட்டுள்ள விளம்பரங்களை நம்பி கிலாபத் ஊழியர்களாகிய நாம் சுல்தான் இப்னுசுஊத் அவர்களை ஆதரித்ததற்காக அந்தரங்கம், பகிரங்கம், அகம், புறம் முதலிய சகலவற்றையும் நன்கறிந்திருக்கும் அல்லாஹு த ஆலாவின் சந்நிதானம் சிக்ஷிக்குமா?

மஸ்ஜிதெ நபவியின்மீது குண்டுப் பிரயோகம் செய்யப்பட்டதாய், ராய்ட்டர் கம்பெனியார் இந்தியாவுக்கனுப்பிய பிரஸித்தி பெற்ற தந்திச் செய்தியை முன்னிட்டு நாட்டில் பெரும் கூச்சலேற்பட்டது. ராய்ட்டர் தந்தியிலறிவிக்கப்பட்டுள்ள செய்தியின் உண்மையை யறியும் பொருட்டு அஸம்பலியிலும், கௌன்ஸல் ஆப் ஸ்டேட் (Council of State)டிலும் உள்ள முஸ்லிம் மெம்பர்கள் சுல்தான் இப்னுசுஊத் அவர்களின் சமுகத்திற்குத் தந்தி கொடுத்தார்கள். இத்தந்திக்கு சுல்தான் அவர்கள், இந்திய அரசாங்கத்தின் மூலமாய் அனுப்பிய மறுமொழியாவது:—"அல்லாஹு த ஆலாவின் உண்மைமொழி உயர்வையடைய வேண்டுமென்பதும், "சுன்னதெநபவி" நிலவ வேண்டுமென்பதும், நம் சமூகத்தின் நோக்கமேயன்றி 'ஹரமைன் ஷரீபைக்' கைப்பற்றிக் கொள்ளவேண்டு மென்பதல்ல. இச்செய்தியால் தங்களுக்காறுதலேற்படுமென்று நம்புவதோடு 'அல்லாஹ்' விடத்தும், முஸ்லிம்களிடத்தும் நாம் செய்திருக்கின்ற வாக்குறுதியை விட்டுப் புரளாமல் ஸ்திரமாகவிருக்கிறோம்; என்பதை நம் இந்திய முஸ்லிம் சகோதரர்களுக்கு அறிவுறுத்துவீர்களென்றும், நம்புகிறோம்.

முஸ்லிம் உலகத்தினுடையவும், கல்வியறிவில் தேர்ச்சியுள்ள உலமாக்களுடையவும், நோக்கங்களை மீறி நடக்கமாட்டோம்.''

இச்செய்தி மிகத்தெளிவாயிருக்கின்றது. ஆதலின் இதை விளக்கிக்காட்டும்பொருட்டு எதையும் விரித்துக்கூற வேண்டியதவசியமில்லை. கெட்ட எண்ணம், ஆதாரமற்ற சந்தேகம் ஆகியவைகளைச் சார்ந்த பாவத்திற்கு நாம் ஆளாகாதிருக்க வேண்டுமாயின், மேற்கூறிய இத்துணை வாக்குறுதிகளை நம்பாமற் தள்ளிவிடுவது சாத்தியமா?

ஹிஜ்ரீ 1344-வது வருடம் ரபீஉல்ஆகர் மாதத்தில் சுல்தான் இபுனுசுஊத் அவர்கள் முஸ்லிம் உலகிற்கு விடுத்த அறிக்கை மிக முக்கியமானதாகும். அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:—''நான் தூய்மையான அல்லாஹுதஆலாவின்பேரில் சத்தியமிட்டுக்கூறுவதாவது:- ஹிஜாஸைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்றாவது, அதில் என் ஆதிக்கத்தை ஸ்திரப்படுத்த வேண்டுமென்றாவது, நான் எவ்வமயத்திலும், உத்தேசித்ததே கிடையாது. இந்திய முஸ்லிம்களைப் போன்ற மதாபிமானமுள்ளோர்க்கும், இஸ்லாமிய சமூகங்களுக்கும், கட்டுப்பட்டு, முஸ்லிம் உலகின் நோக்கத்திற்குத் தலைவணங்கும் ஓர் அதிகாரியை ஹிஜாஸ்வாசிகள் தேர்ந்தெடுக்கும் வரை, அந்நாடு என்னிடம் ஓர் அமானிதமாகவே யிருந்துவரும். ஹிஜாஸின் தலைவர்பதவியையொட்டி உலக முஸ்லிம்களின் அபிப்ராயத்தைப்பெற ஒரு பெரும் ஏற்பாட்டைச் செய்ய விருக்கின்றோம். ஹிஜாஸின் தலைவர் பதவியை எவருக் களிக்க முஸ்லிம் உலகம் கருதியிருக்கிற தென்பது, அவ்வேற்பாட்டின் மூலமாய்த் தெரிந்துகொள்ளலாம்.'' (''ஹம்தர்த்,'' 14-12-'25.)

எந்த மானிடனாவது, சந்தேகமற்ற இவ்வாக்குறுதியைக் காட்டினும் வேறு வாக்குறுதியைச் செய்ய வியலுமா? மேல்நாட்டு ஆட்சியைச் சார்ந்த ராஜதந்திர நிபுணர், வாக்குறுதியை நிறைவேற்றாதவராகவிருப்பது உண்மையே. ஆனால், மேல்நாட்டின் எந்த ராஜ தந்திரியும் இத்தகைய உறுதியாயும், தெளிவாயும், வார்த்தையாடுவதோடு அல்லாஹுதஆலாவின் நாமத்தைச் சம்பந்தப்படுத்திப் பொய்ச் சத்தியஞ் செய்யக்கூடிய தைரியத்தைப் பெற்றிருக்கின்றனரா? இத்தகைய பிரத்தியேகமான பெரும்பதவியைக் கொண்டிருப்போரை உலகச் சரித்திரமேனும் அறிந்திருக்கிறதா? வாக்குறுதியை நிறைவேற்றாதவரென்னும் கீர்த்தி, உண்மையாகவே இஸ்லாமைப் பின்பற்றும் ஒரு முஸ்லிமுக்கு, இஸ்லாமிய ஷரீஅத்தைக் கடைப்பிடித்தொழுகப் போவதாய்ப் பறைசாற்றிய ஒரு முஸ்லிமுக்கு, அல்லாஹுதஆலாவின் பரிசுத்தமான இல்லத்தில் வசிக்கும் ஒரு முஸ்லிமுக்கு மட்டும் பிரத்தியேகமான லக்ஷணம்போலும்!

ஹஜ்ஜை நிறுத்துவது நன்மையா?

("அந்நாலிர்" பத்திரிகையின் ஆசிரியர் எழுதியது)

பிரிட்டிஷ், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய ஆட்சிகட்கு விரோதமாய் துருக்கி யரசாங்கம், 1915-வது ஆண்டில் ஜர்மனி, ஆஸ்டிரியாவோடு சேர்ந்து போர் புரிந்தது. அவ்வமயம் துருக்கி யரசாங்கமானது 'ஜிஹாத்' என்னும் விளம்பரத்தைச் செய்து உலக முஸ்லிம்களின் ஆதரவைக் கோரிற்று. ஆனல், "துருக்கி புரியும் யுத்தம் ஜிஹாத் என்னும் மதப்போரல்ல வாதலின், துருக்கியர்களுக்கு உதவிபுரிவதற் குப் பதிலாய் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உதவிபுரியுங்க" ளென்று, இந்தி யாவில் சில மௌல்விகள் முஸ்லிம்களுக்குப் போதித்தனர். ஆகவே, இந்தியாவிலுள்ள பணக்காரர்களும், பட்டதாரிகளும், ஜமீன்தார் களும், அநேகமாய் அந்த யுத்தத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்திற் குப் பணத்தாலும், படையாலும், ஏராளமாய் உதவி புரிந்தார்கள். முஸ்லிம்கள் பெரும்பான்மையோரா யிருந்த இந்திய சைனிய மானது, இராகிலும், பாலஸ்தீனிலும் கலீபாவின் சைனியங்களை எதிர்த்துப் போர்புரிந்து, அவ்விரண்டு இஸ்லாமிய நாடுகளையும் பிடுங்கி பிரிட்டிஷாரின் ஆதிக்கத்திற்குட் படுத்திவிட்டது. "லார்ட் அல்லன்பி" பைதுல் முகத்தஸில் பிரிட்டிஷ் கொடியை நாட்டியதை முன்னிட்டு, பிரிட்டிஷ் பிரதான மந்திரியாக விருந்த லாயிட் ஜார்ஜ், காமன்ஸ் (House of commons) ஸபையில் "ஐரோப்பாவின் எல்லா அரசர்களும் சேர்ந்து பல நூற்றாண்டுகளாய் முஸ்லிம்களை யெதிர்த் துப் போர்புரிந்தும் ஜெயிக்க முடியாதிருந்த, பெரும் சிறப்பு வாய்ந்த நாட்டை கடைசியாய் பிரிட்டிஷ் சைன்யம்மட்டும் இன்று தனியே நின்று போர்புரிந்து கைப்பற்றிக்கொண்டது" என்று அதி பெரு மையாய்க் கூறியிருக்கின்றார்.

"ஜஸீரத்துல்அரபை"ச் சார்ந்த 'பலஸ்தீன்' என்னும் பாகத்தையும் 'இராக்' என்னும் பாகத்தையும் இஸ்லாமிய கலீபா விடமிருந்து முஸ்லிம்களே பிடுங்கி, கிறிஸ்தவரிடம் ஒப்பு வித்த சம்பவம் பழைய வரலாறாகி விடினும் இத் துர்ச்செய் கையால் இந்திய முஸ்லிம்களின் நெற்றியில் ஏற்பட்ட வடுக்கள் இன்னும் மறையவில்லை. இந்திய முஸ்லிம்கள் குர்ஆன் ஷரீபின் கட்டளைகளை மீறி, முஸ்லிம் சகோதரர்களின் இரத்தத்தைச் சிந்தி னார்கள். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் உத்தரவை அலக்ஷியஞ் செய்து, அவர்களின் கடைசி உபதேசத்தை மறந்து, கலீபத்துல் முஸ்லிமீனுக்கு எதிரிடையாய்ப் போர்புரிந்து,

கலீபாவின் ஸ்வாதீனத்திலிருந்த நாடுகளைத் தங்களின் கிறிஸ்தவ அரசர்களுக்குட் படுத்திவிட்டனர். அல்லாஹுதஆலாவின் கட்டளைக்கும், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் உபதேசத்திற்கும் விரோதமாய், இந்திய முஸ்லிம்கள் புரிந்த இவ்வபாரமான துர்க்கிருத்தியத்தை யொட்டி, அல்லாஹுத ஆலா உலக முடிவு நாளன்று விதிக்கக்கூடிய சிக்ஷையை அல்லாஹுதஆலா தான் நன்கறிவான். ஆனால், இந்திய முஸ்லிம்கள் தங்களின் கிறிஸ்தவ எஜமானர்களைத் திருப்தி செய்வதற்காக சர்வ வல்லமையுமுள்ள அல்லாஹுத ஆலாவையும், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களையும் அலட்சியஞ் செய்துவிட்டன ரென்னும் ஈனஸ்திதியை மறக்க வியலுமா?

முஸ்லிம்களை இழிவுபண்ணக்கூடிய காலமானது இன்னமும் தீரவில்லை யென்றே தெரிகிறது. ஏனெனின், கலீபத்துல் முஸ்லிமீனுக்கு விரோதமாய் முஸ்லிம்களை பிரிட்டிஷாரோடு சேர்ந்து போர்புரியும்படிச் செய்து, பிரிட்டிஷாருக்கு வேண்டிய எல்லா உதவிகளும் புரிந்து, இராக், பலஸ்தீன் ஆகிய நாடுகளில் கிறிஸ்தவ ஆட்சியை நிலவச் செய்தவர்களே அநேகமாய் இன்று முஸ்லிம்களைக் கஷ்டப்படுத்த முன் வந்திருக்கின்றனர். கிறிஸ்தவர் கைப்பற்றிக் கொண்டது போக "ஜஸீரத்துல் அரபில்" எஞ்சியுள்ள பாகமும், கிறிஸ்தவரின் ஆதிக்கத்திற்குட்பட்டு விடக்கூடிய பாவப் படுகுழியில் முஸ்லிம்கள் விழும்படி தூண்டி வருகின்றனர். 1915-ல் முஸ்லிம் உலகத்திற்கு கேடிழைத்த பொல்லாதோர் இன்று புரியும் காரியமானது, முழு ஜஸீரத்துல் அரபையும் கிறிஸ்தவர்களின் ஆதிக்கத்திற்குட் படுத்தி விடுவது ஆச்சரியமல்லவென்றே கூறவேண்டி யிருக்கிறது.

சுல்தான் இபுனுசுஊத், நஜ்தியரின் கொள்கைப்படி ஹிஜாஸிலுள்ள கோரிகளை யிடித்துவிட்டதை யொட்டி, சுல்தான் அவர்களின் மீது முஸ்லிம்களுள் பெரும்பான்மையோர் அதிருப்தி கொண்டிருக்கின்றனர். சுல்தான் இபுனுசுஊத் அவர்கள் கோரிகளை யிடிப்பதற்கும், இஸ்லாமுக்கும், உள்ள ஸம்பந்தத்தை யொட்டி நான் கூறவேண்டிய விஷயங்களை இவ்வமயம் நிறுத்திவைத்திருக்கின்றேன். முஸ்லிம்களுள் 72 அல்லது அதைவிட அதிகமான வகுப்புகளிருக்கின்றன. இவ்வெல்லா வகுப்புகளின் கொள்கைகளும் ஒரேவிதமாயில்லை. ஞாபகச் சின்னங்கள், கபருகள், கோரிகள், சம்பந்தமாகமட்டுமின்றி அநேக விஷயங்களில் அபிப்பிராய பேதம் இருந்து வருகிறது. இவ்வபிப்பிராய பேதங்களை யொட்டி விவாதித்துக்கொண்டிருப்பது நன்மை பயக்கத்

தக்கதாகத் தோன்றவில்லை. ஒவ்வொரு வகுப்பும், தங்களின் வகுப்பைச் சார்ந்த உலமாக்களின் அபிப்பிராயத்தை யறிந்து அதை யங்கீகரிப்பவராக மட்டுமிருக்கின்றனர். ஆனால், நஜ்தியர்களின் நடவடிக்கையை ஆட்சேபிக்கும் வகுப்புகள் பல இருக்கின்றன. இவ்வகுப்பைச் சார்ந்தோருள் ஒருசாரார் ஹிஜாஸை நஜ்தியரின் ஆதிக்கத்தைவிட்டு மீட்டுவிட வேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றனர். நஜ்தியரிடமிருந்து ஹிஜாஸை மீட்டுக்கொள்வதற்காக இவ்வகுப்பார் கைகொண்டிருக்கும் முறையினால், முஸ்லிம் உலகத்திற்கு ஏற்படக் கூடிய இடையூறுகளைச் சிந்தித்துப் பார்க்கும்படி கோருகிறேன்.

இந்தியா சுயேச்சையுள்ள நாடாகவிருக்குமாயின், இவ்வகுப்பாருக்குப் போதிய சக்தியிருக்குமாயின் இவர்கள் இந்நாட்டிலிருந்து வீரம் சொரிந்த ஒரு படையை ஜித்தா துறைமுகத்திற் கனுப்பி நஜ்தியர்களை விரட்டியடித்திருப்பார்கள். ஆனால், இந்திய முஸ்லிம்களின் கழுத்தில் அடிமை விலங்கு மாட்டப்பட்டிருப்பதால் இத்தகைய எண்ணத்தை நினைக்கக்கூட வழியில்லாமலிருக்கின்றது. ஹிஜாஸைவிட்டு நஜ்தியரை அப்புறப்படுத்திவிட வேண்டுமென்று தீர்மானித்திருப்போர், இன்று செய்யக் கருதும் காரியத்தின் மூலமாய் நஜ்தியரை ஹிஜாஸை விட்டு வெளியேற்ற முடியாவிடினும், முஸ்லிம் உலகிற்கும், இஸ்லாமுக்கும் அக்காரியமானது பெரும் நஷ்டத்தை விளைவிக்கலாம். ஹஜ்ஜுக்குச் செல்வதை சில வருடங்கள்வரை நிறுத்திவிட வேண்டுமென்று அறிவிக்கப்படுகின்றது. உலக முஸ்லிம்களெல்லோரையும் ஹஜ்ஜுக்குச் செல்லாமல், தடுத்துவிட வேண்டுமென்னும் யோசனை சாத்திய மற்றதென்றே கூறவேண்டியிருக்கின்றது. ஏனென்னின், இந்தியர் கூறும் இவ்வாலோசனையை இஸ்லாமிய உலகம் ஏற்றுக்கொள்ளுமென்று நம்புவதற்கில்லை. ஈரான் தேசத்திலுள்ள 'ஷீஆ' ஆட்சியைத் தவிர மற்ற வரசாங்கங்கள் கபர்களையும், கோரிகளையும், மற்ற ஞாபகச்சின்னங்களையும், இடித்துத் தள்ளியதை முன்னிட்டு ஹஜ்ஜை நிறுத்தவோ, அல்லது நஜத் அரசாங்கத்துக்கு விரோதமாய்ச் செய்யப்படும் போரில் சம்பந்தப்படவோ சம்மதிக்க மாட்டாரென்றே கருதவேண்டியிருக்கிறது. மேலும், துருக்கி, ஆப்கன், எகிப்து ஆகிய சுயேச்சையுள்ள இஸ்லாமிய நாடுகளிலும், 'எமன்', 'அஸீர்', 'பலஸ்தீன்', 'ஷாம்' முதலிய முஸ்லிம் நாடுகளிலும் ஏதேனும் உணர்ச்சியேற்பட்டிருப்பதாய்த் தெரியவில்லை. ஒரு சமயம் இந்திய முஸ்லிம்கள் காட்டும் வழியைப் பின்பற்றி இஸ்லாமிய உலகம் ஹஜ்ஜை நிறுத்திவிடின், அதனால் ஏற்படும் நன்மையாது ? சென்ற யுத்தகாலத்தில் ஹஜ்ஜு நிறுத்தப்படாவிடினும் அநேகமாய் நிறுத்தப்பட்ட

தைப் போலவே யிருந்தது. ஆனால் ஷரீபு ஹுஸைனின் முகமேனும் வாடிற்றா? வாடவேயில்லை. இன்று ஹஜ்ஜு நிறுத்தப்படுமாயினும், நஜத்சுல்தானுக்கு சவுகரியமிருக்கும் வரையில், தங்கள் நாட்டிலிருந்து தொகையை வரவழைத்து செலவு செய்து கொள்ளக்கூடும். ஹிஜாஸ்வாசிகளும் சில கஷ்ட நிஷ்டூரங்கட்கிடையே தங்களின் ஜீவனத்தை நடத்திக்கொள்வர். ஆனால், மக்கமா நகரிலும், மதீனமா நகரிலும் வசிக்கின்ற வெளிதேச முஸ்லிம்கள் பட்டினியால் பீடிக்கப்பட்டு மாண்டுபோவார்களென்பது திண்ணம். ஒரு சமயம், நஜத்சுல்தானுக்கு ஹஜ்ஜு நிறுத்தப்படுவதால் பரிகரிக்க முடியாத தொந்தரை யேற்படுமாயின் பிரிட்டிஷ், பிரான்ஸ், இடலி ஆகிய ஆட்சிகளிடம் நஜத்சுல்தான் அந்தரங்க உடன்படிக்கையின் மூலமாய்த் தொகை வாங்க முற்படக்கூடும். மகா யுத்தகாலத்தில் ஷரீபு ஹுஸைனுக்கு 50,000-பவுனும், நஜத்சுல்தானுக்கு 50,000-பவுனும், பிரிட்டாஷா ரால் கொடுக்கப்பட்டு வந்தது. ஆகவே, இவ்வமயத்திலும், பிரிட்டிஷ், பிரான்ஸ், இடலி முதலிய கிறிஸ்தவ ஆட்சிகள் வெகு சந்தோஷத்தோடு ஹிஜாஸ் அரசாங்கத்திற்குப் பணவுதவி செய்யமுன் வந்துவிடுமென்பதில் ஐயமில்லை. இதன் பயனாக் முஸ்லிம் உலகம் தங்களின் மதக் கடமையை சில வருடங்கள்வரை நிறைவேற்ற முடியாமற் போவதோடு நஜ்தும், ஹிஜாஸும் நேர்முகமாக இல்லாவிடினும், மறைமுகமாகவாவது கிறிஸ்தவரின் அடிமை விலங்குகளைக் கழுத்திலும், காலிலும் மாட்டிக்கொள்ளு மென்பது திண்ணம்.

ஹஜ்ஜை நிறுத்துவதென்னும் யோசனையை விட்டு 'குத்தாமுல் ஹரமைனைச் சார்ந்த சகோதரர்கள் பிரிட்டிஷ் ஆட்சியை இவ்விவாதத்தில் தலையிடும்படி அழைப்பார்களாயின், 'இராக்' 'பலஸ்தீன்' ஆகிய நாடுகளைப்போலவே ஹிஜாஸும், நஜ்தும், ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குட்பட்டு விடுமென்பது திண்ணம். அரேபியா, தம் ஆதிக்கத்திற்குட்பட வேண்டுமென்று ஒவ்வொரு வழியிலும் பிரிட்டிஷார் முயன்று வருவது வெளிப்படை. பர்ஷியன் குடாவைச்சார்ந்த சிறிய அரபி ஆட்சிகள் அநேகமாய் பிரிட்டிஷாருக்குட்பட்டு விட்டன. எமன், அஸீர், ஹிஜாஸ், நஜ்து ஆகிய நாடுகளைத் தவிர ஜஸீரதுல் அரபைச்சார்ந்த மற்ற நாடுகளெல்லாம் ஆங்கிலேயருக்கும், பிரான்சுக்காரருக்கும் உட்பட்டிருக்கின்றனவல்லவா? எஞ்சியுள்ள ஜஸீரதுல் அரபைச் சார்ந்த இச்சில நாடுகளேனும் முஸ்லிம்களின் ஸ்வாதீனத்திலிருப்பது 'குத்தா முல்ஹரமைனை'ச் சார்ந்த சகோதரர்களுக்கு சம்மதமில்லையா? நஜ்தையும், ஹிஜாஸையும் பிரிட்டிஷார் தங்களின் ஆதிக்கத்திற்குட்படுத்தி விடுவார்களாயின், எமனும்,

அஸீரும், சுயேச்சை பெற்ற நாடாகவிருக்க முடியுமா? நாயகம் ஸல்லல்
லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பேரப்பிள்ளையும், ஹஜ்ரத்
அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் பிள்ளையும், நபித்துவத்தின்
குடும்பத்தைச் சார்ந்த ஞாபகச் சின்னமுமான "ஹுஸைன் ரலியல்
லாஹு அன்ஹு" அவர்களை "கர்பலா" வென்னும் திறந்த வெளி
யிற் ஒரு இஸ்லாமிய அரசரின் கட்டளைப்படி கொல்லப்பட்ட துக்க
கரமான செய்தி, சரித்திரத்தில் மறக்க முடியாத சம்பவமாகவிருந்து
வருவதைப்போல், ஜஸீரதுல் அரபைச்சார்ந்த ஒவ்வொரு பாகத்தை
யும், இந்திய முஸ்லிம்கள் தங்களின் துர்ரதிர்ஷ்டமான தியாகங்க
ளால் கிறிஸ்தவரின் ஆதிக்கத்திற்குட் படுத்தினார்களென்று சரித்தி
ரம், முஸ்லிம்களை சதா இழித்துக்கூற இடங்கொடாமல் முஸ்லிம்கள்
எச்சரிக்கையாக விருக்கவேண்டும். முஸ்லிம்களுள் சச்சரவேற்பட்டு
இரத்தம் சிந்தாமலிருப்பதற்காவும், முஸ்லிம்களின் நன்மையைக் கருதி
யும், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பேரப்
பிள்ளை கிலாபத்துப் பதவியைத் துறந்து ஹஜ்ரத் "முஆவியா" ரலி
யல்லாஹு அன்ஹு அவர்களுக்கு விசுவாசப் பிரமாணஞ்செய்து
விட்டார்களல்லவா? மறைக்கமுடியாத இழிய வடுக்கள் முஸ்லிம்க
ளின் நெற்றியில் ஏற்படாமலிருக்க வேண்டுமாயின், "குத்தாமுல்
ஹரமைன்" சகோதரர்கள் மேற்கூறிய அரும் தியாகத்தைச் சிந்தித்
துப் பார்க்கவேண்டும்.

ஹிஜாஸிலுள்ள கபர்களையும், ஞாபகச் சின்னங்களையும் இடித்
துத் தள்ளியதைப் பொருட்படுத்தாதிருப்பவர் சம்பந்தமாய் இவ்
வமயம் எதையும் கூறவேண்டிய தவசியமில்லை. ஆனால், ஷீஆ வகுப்
புச் சகோதரர்களிடத்தும், கோரிகள் இடிக்கப்பட்டதை யொட்டி
ஷீஆ சகோதரர்களைப் போலவே வருத்தத்திற்குட்பட்டிருக்கும்
நண்பர்களிடத்தும், செய்துகொள்ளவேண்டிய கோரிக்கை.—"முஸ்
லிம்களின் நிலைமையைச் சிந்தித்து அவர்களுக் கிரங்குங்கள். கஷ்ட
நிஷ்டூரங்கட்குட்பட்டு சுல்தான் இபுனுசுஊத் அவர்கள், கிறிஸ்தவ
ஆட்சிகளின் பாதம் பணியும்படிச்செய்து விடாதீர்கள். 13-நூற்றாண்
டுகளாய் முஸ்லிம்கள் இடைவிடாது பாதுகாத்துவந்த ஜஸீரதுல்
அரபைச்சார்ந்த பாகங்களை யிழந்துவிடாதீர்கள்" என்பதே.

முஸ்லிம்களே! இஸ்லாம் மதவிஸ்வாசிகளே!! "ஜஸீரதுல்
அரபை விட்டு யூதரையும், கிறிஸ்தவரையும் அப்புறப்படுத்தி விடுங்
கள்" என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்
செய்த கடைசி உபதேசத்தைப் பின்பற்றி ஷாம் தேசத்தில் ப்ரான்
ஸுக்கிருந்து வரும் ஆதிக்கத்தையும், பலஸ்தீன், இராக், பர்ஷியன்

குடா, ஏடன் ஆகியவைகளிற் பிரிட்டிஷாருக்கிருக்கும் ஆதிக்கத்தையும் ஒழிப்பதற்குச் சக்தியற்றிருப்பினும், ஹிஜாஸ், நஜ்த், அஸீர், எமன் ஆகியவைகளை பிரிட்டிஷும், பிரான்சும் தங்களின் ஆட்சிக்குட்படுத்திக் கொள்ள வழி தேடாதீர்கள். 'கபர்'களையும், 'கோரி'களையும், ஞாபகச் சின்னங்களையும், இடித்துத் தள்ளியதை யொட்டி உண்மையாகவே உங்களுக்கு மனவருத்த மேற்பட்டிருப்பின், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பேரப்பிள்ளையின் தியாகத்தையும், குர்ஆன் ஷரீபின் நற்போதனையையும் பின்பற்றி பொறுமையைக் கடைப்பிடியுங்கள். அல்லாஹுத ஆலாவைத் தொழுது 'துஆ'ச் செய்யுங்கள். நீங்கள் கைகாலற்றவர்களாயும், சக்தியை யிழந்தவர்களாயும், ஆதரவின்றி அலைந்து திரிபவர்களாயுமிருப்பீர்களாயின் இஸ்லாமிய கௌரவமும், அரேபியாவின் சிறப்பும், அழிந்துவிடாத முறையைப் பின்பற்றி உங்கள் லக்ஷியத்தையடைய முயலுங்கள். கல்வித் தேர்ச்சியுள்ள உத்தமர்களையும், நல்ல உலமாக்களையும், முன் யோசனையுள்ள பெரியார்களையும், நஜ்துக்கும், ஹிஜாஸுக்கும் ஏராளமாக அனுப்புங்கள். அவர்கள் சிலகாலம் அந்நாடுகளில் தங்கி நஜ்தியர்களின் கொள்கையையும், வேற்றுமையான அபிப்ராயத்தையும், ஒழிப்பதற்கு முயற்சிப்பார்கள். அப்பிரசாரத்திற்காகவும், நஜ்தியரின் ஹிருதயங்களை வயப்படுத்துவதற்காகவும், உங்களிடமுள்ள பொருளை அர்ப்பணஞ் செய்யுங்கள். மேற்கூறியவைகளை சாந்தமாயும், அடக்கமாயும் ஒழுங்கு முறையோடு புரிய முன் வருவீர்களாயின், அரபிய ஆட்சிகட்கு எத்தகைய இடையூறுமின்றி உங்கள் லக்ஷியம் கைகூடும் என்னும் நம்பிக்கை எனக்குப் பூரணமாக இருந்து வருகிறது. நஜ்தியர் ஹிஜாஸில் வசிப்பதன் பயனாகவே அநேகமாய் அவர்களின் மதப்பொறுமையின்மையும், அறியாமையைச்சார்ந்த வைராக்கியமும் தாமாகவே குறைந்துபோம். பின்னர், உங்கள் அரிய பிரசாரத்தின் மூலமாய், நஜ்தியர் உங்கள் நற்குணம், தயாளம், பிரீதி ஆகியவைகளை யறிந்து உங்கள் பாதங்களை முத்தமிட ஆவற் கொள்வார்கள்.

மௌலானா ஷௌகத்அலீ அவர்களுடையவும், மௌலானா முஹம்மத்அலீ அவர்களுடையவும் அபிப்பிராயத்திற்கேற்ப "முஸ்லிம் உலக ஐக்கியச் சங்கத்தில் முஸ்லிம்கள் ஏராளமாய் அங்கத்தினராகச்சேர்ந்து அச்சங்கம்நல்லபலத்தையடைந்துவிடுமாயின்,முஸ்லிம் உலகு இடும் கட்டளைப்படி ஹிஜாஸ் ஆட்சியானது சீர்திருந்தலாம்."

எவ்விதமேனும் முஸ்லிம்கள் ஹிஜாஸின் நிலைமையைச் சீர்திருத்த முயலவேண்டுமேயன்றி அந்நாட்டைப் பாழ் பண்ணலாகாது.

ஷரீபு ஹுஸைனின் துர்க்கிருத்தியக் காலத்தும் நான் இத்தகைய அபிப்ராயத்தையே கொண்டிருந்தேன். ஏனெனின்? முஸ்லிம்களுக்குள் யுத்தமேற்படுவது முஸ்லிம்களுக்கு நட்டமேயன்றி நன்மையேற்படப்போவதில்லை. ஒருக்கால் அது கிறிஸ்தவ ஆட்சிகளுக்கு நன்மையாக விருக்கலாம்.

மௌலானா ஷௌகத் அலியின் கோரிக்கை.

21-7-26-க்குச்சரியான 'முஹர்ரம்' மாதம் 10-ந்தேதி நாங்கள் ஹரமெ நபவியின் பரிபாலனக் கருத்தாவாகிய "சையித் ஜைனுல் ஆபிதீன் சாஹிப் மதனீ" அவர்களையும், அவர்களின் சகோதரர்களையும், அவர்களின் வீட்டிக்குச்சென்று சந்தித்தோம். மஸ்ஜிதெநபவியினுடையவும், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பரிசுத்தமான "ரௌலா ஷரீபு" னுடையவும், செலவு சம்பந்தமான உண்மை நிலையை விசாரித்தோம். மதீனமாநகரிலுள்ள ஹரமெஷரீபையும், பரிசுத்தமான ரௌலாஷரீபையும், கண்ணுற்றோர்க்கு உதுமானிய சுல்தான்களும், துருக்கி சமூகமும் அவைகட்கு எத்தகைய ஊழியம் புரிந்துளது என்பது புலப்படும். சுவர்களையும், விரிப்புகளையும் மேல் தளங்களையும், பார்ப்போமாயின் துருக்கியர் அவைகளை அலங்கரிப்பதற்காகப் பணத்தை ஜலத்தைப்போல் செலவிட்டிருப்பதுமட்டுமேயன்றி, அவர்களின் காலத்தையும் செலவிட்டிருப்பது விளங்கும்.

மக்கமா நகரத்திற்கும், முழு ஹிஜாஸ் தேசத்திற்குமுள்ள செலவு நீங்கலாக, மஸ்ஜிதெநபவி, பரிசுத்தமான ரௌலா ஷரீபு ஆகியவைகளின் செலவுக்காகமட்டும் வருடம் ஒன்றுக்கு 72,000 கினி (சற்றேறக்குறைய சுமார் 11-லக்ஷம் ரூபாய்). உதுமானிய அரசாங்கமும் துருக்கியரும், அளித்து வந்திருப்பதாய்த் தெரிகிறது. கட்டடம், மராமத்து முதலிய செலவுகளைத்தவிர இப்பதினொரு லக்ஷ ரூபாய்கள், பரிசுத்தமான ரௌலா ஷரீபைச் சுத்தம் செய்வதற்கும்; "முஅத்தின்' இமாம், ஊழியர் ஆகியவர்களின் சம்பளத்திற்கும் தீபமேற்றும் செலவுக்குமாகும்." துருக்கி அரசாங்கம் புரிந்து வந்திருக்கிற இப்பெரும் உபகாரத்தை எந்த உண்மை முஸ்லிமும் மறந்துவிடமுடியாது. மதீனமாநகருக்குத் துருக்கியர் புரிந்துவந்த இவ்வுதவி 10-வருடங்களாக நின்று போயிற்று. துருக்கியர் ஹிஜாஸிலிருந்து வெளியேறியது முதற்கொண்டு ரௌலா ஷரீபின் மேற்கூறிய பரிபாலனத்தில் மாறுதலேற்பட்டுவிட்டது. ஷரீப் ஹுஸைன்

தன் 8-வருடத்திய ஆட்சி காலத்தில் சுமார் 2,000-கினிமட்டுமே மஸ்ஜிதெநபவியின் செலவுக்காகவும், பரிசுத்தமான ரௌலாஷரீபுக்காகவும் கொடுத்திருக்கின்றார். சுல்தான் இபுனுசுஊதும் ஹிஜாஸை யடைந்தது முதல் இதுவரை ரௌலா ஷரீபின் செலவுக்காக சுமார் 1,500-அல்லது 2,000-கினிமட்டுமே அனுப்பியிருக்கின்றார். ஆனால், ரௌலாஷரீபின் ஊழியர்களுக்குச் சம்பளச் செலவுக்காகமட்டும் சுமார் 1,500-கினி வேண்டியிருக்குமென்பது சகலரும் அறிந்ததே.

ரௌலா ஷரீபினுடையவும், மஸ்ஜிதெநபவியினுடையவும், ஊழியர்கள் இன்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீதுள்ள விசுவாசம், முஸ்லிம்களின் ஆதரவு ஆகியவைகளை முன்னிட்டே அவைகளுக்குச் சேவை செய்கின்றனர். துருக்கியர் கொடுத்து வந்த சம்பளத்தொகையிலிருந்து எஞ்சியவற்றைக் கொண்டே அவ்வூழியர்கள் இப்பத்துவருடங்கள்வரைக் காலங்கழித்திருப்பதாய்ப் பொறுப்புள்ள சில அதிகாரிகள் நமக்கறிவித்தனர். துருக்கியர் சேகரித்து வைத்திருந்த சுத்தஞ் செய்த ஜைத்தூன் எண்ணெய், அத்தர், ஊதுவத்தி, அகர்வத்தி ஆகியவைகள் சென்ற சிலதினங்கள் வரை ரௌலா ஷரீபுக்கும், மஸ்ஜிதெநபவிக்கும் உபயோகிக்கப்பட்டு வந்தன. அவைகள் தீர்ந்துபோன பின்னர், கடன்வாங்கி ரௌலா ஷரீபுக்கு எண்ணெய், அத்தர், ஊதுவத்தி ஆகியவைகள் உபயோகிக்கப்பட்டு வருவதாக நாங்கள் அறிவிக்கப்பட்டோம். எண்ணெய், அத்தர், ஊதுவத்தி, அகர்வத்தி, புறாக்களுக்குத் தீனி, மதினமாநகரின் வீதிகளிற்றிரியும் நாய்களுக்கன்னம் முதலியவைகளை கான்ஸ்டாண்டி நோபிளிலிருந்து அதிவிசுவாசத்தோடு அனுப்பிக்கொண்டிருந்த துருக்கியரை நினைந்து முஸ்லிம் உலகு கவலைகொள்ளாமலிருக்க முடியுமோ?. இவ்வமயம் முன்போல் உதவி செய்யக்கூடிய நிலையில் துருக்கியர் இருக்கவில்லை. இஸ்லாமிய உலகைச்சார்ந்த சகல மதக்கடமைகளையும் துருக்கியர் புரிந்துவிடுவார்கள் என்னும் நியாயமற்ற நம்பிக்கையை முன்னிட்டு, முஸ்லிமுலகம் இஸ்லாம் ஏற்காதமுறையில் கவலையற்றிருந்தது. துருக்கியர் மீதுமட்டும் சகல கடமைகளையும் சாட்டிவிட்டு முஸ்லிம் உலகம் அயர்ந்துகிடந்ததன்பயனை முஸ்லிம்கள் இன்று நன்றாய் அறிந்துகொண்டனர். மஸ்ஜிதெநபவியின் விலையுயர்ந்த அழகிய நல்ல 240-விரிப்புகளை ஷரீப் ஹுஸைன் தன் சொந்த உபயோகத்திற்காக எடுத்துக்கொண்டார். ஆனால், இன்று மஸ்ஜிதெநபவியில் கிழிந்த விரிப்பேனும் போதிய வளவு கிடையாது. மேற் கூறியவைகளைப் பொறுப்புள்ள முக்கியஸ்தர்களின் மூலமாய்ச் செவியுற்ற எங்கள் ஹிருதயங்கள் ஆராத்

துயரத்துக்குள்ளாயின. ஆகவே, பலஹீனத்தால் குன்றிப்போயிருக்கும் நாங்கள் கிலாபத்கமிட்டி போதிய ஆதாரவற்றிருக்கும் இன்னுளில், இந்தியாவின் உணர்ச்சி மழுங்கி யிருக்கும் ஸ்திதியிலும் மஸ்ஜிதெநபவி, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ரௌலாஷரீபு, ஆகியவைகட்கு 'ஜைத்தூன்' எண்ணெய், அத்தர், ஊதுவத்தி முதலிய செலவுக்காக வீடு வீடாய்ச் சென்று முஸ்லிம்களிடத்தில் ஐயமெடுத்தேனும் இந்தியாவிலிருந்து கிலாபத் கமிட்டியின் மூலமாய், ஹரமின் காரியஸ்தர் அவர்கள் சமுகத்திற்குக் குறைந்த பக்ஷம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 400-அனுப்புவோமென்று வாக்களித்திருக்கின்றோம்.

சூரத் வாசியாகிய யாகூப் கோராபாவா சாஹிப் என்னும் எங்களின் நண்பரொருவர், ரெங்கூனில் ஸ்திரமாயிருக்கின்றார். அவர், தம் நண்பர், உறவினரோடு இவ்விடம் ஹஜ்ஜுக்கு வந்திருந்தார். அவர், மேற்கூறிய துக்ககரமான வரலாற்றை யறிந்து தானும், தன் நண்பர்களுமாகச் சேர்ந்து மாதம் ஒன்றுக்கு ரூபாய் 70-அனுப்புவதாக வாக்குச் செய்திருக்கின்றார்.

இந்திய முஸ்லிம்களிடத்தில் பொதுவாயும், கிலாபத் கமிட்டியை யாதரிப்பவரான முஸ்லிம்களிடத்தில் குறிப்பாயும், நான் கோருவது யாதெனின், அவர்கள் எங்களுக் குதவிசெய்ய முன் வரவேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் மாதா மாதம் ஏதேனும் ஒரு சிறிய தொகையை யனுப்பினாலும் சரி, அல்லது முழு வருடத்துக்கும் சேர்த்து ஒரு தொகையை யனுப்பினாலும் சரி, அதி வந்தனத்தோடு அத்தொகைகளை ஏற்றுக் கொள்வோம். வருடம் ஒன்றுக்கு சுமார் 5,000 ரூபாய் போதியதாகும். பரிசுத்தமான ரௌலா ஷரீபின் இவ்வறிய சேவையானது நம் இந்திய முஸ்லிம்களின் அதிருஷ்டத்தைச் சாரவேண்டுமென்பது எங்கள் நோக்கமாகும். ஆகவே, எங்களின் இக்கோரிக்கையை யறிந்தவுடனேயே தேசத்தின் ஒவ்வொரு பாகத்திலிருந்தும் அப்பொறுப்பை மனப்பூர்வமாய் பெற்றுக்கொண்டோமென்னும் சப்தத்தைச் செவி யுறுவோமென்னும் நம்பிக்கை எங்களுக்கு விசேஷமாயுண்டு. அகில இந்திய கிலாபத் கமிட்டியின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் பொருட்டு விடா முயற்சியோடு வேலைசெய்ய வேணுமாய், இந்தியாவின் மாகாணக் கிலாபத் கமிட்டிகளையும், ஜில்லா கிலாபத் கமிட்டிகளையும், கிலாபத் ஊழியர்களையும் கேட்டுக்கொள்ளுகிறோம். எங்களால் கூடியவரையில் சுற்றுப்பிரயாணங்களைச் செய்கிறோம். கூட்டங்களைக் கூட்டுகிறோம். விண்ணப்பங்களைச் செய்கிறோம், அரசாங்கத்தின் எதிர்ப்புக்

கிடையே, கிலாபத்தின் கொடியைத் தாங்கி நிற்கின்றோம். என் சொந்த தேகஸ்திதியைப்பற்றி எடுத்துக் கூற யான் விரும்பவில்லை. ஆயினும், என் தேகம் சீர்கெட்டு விட்டதென்று கூறவேண்டித் தானிருக்கிறது. இந்நிலையில், எல்லா பொறுப்புகளையும் நான் மட்டும் சுமப்பதற்குப் போதிய சக்தி யற்றவனாயிருக்கிறேன். இப்பெரும் வேலைகள் என் முயற்சியால் மட்டும் நடந்ததென்று கூற நான் தயாராயில்லை. ஒவ்வொரு பாகத்திலும் தைரியமுள்ள சகோதர சகோதரிகளும் நம் ஆதரவற்ற நிலைமையைக் கண்ணுற்று, கிலாபத் கமிட்டிக்குச் சகாயம்புரிய முன்வந்தனர். ஆனால், இவ்வமயம் அவர்கள் ஒழுங்கு முறைக்குட்பட்டு, இடைவிடாது சதா வேலை செய்யத் தயாராகி விடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வருடம், மார்ச், ஏப்ரல் மாதங்களில் மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்களோடு பர்மாவுக்குச் சென்றிருந்தேன். பர்மாவிலுள்ள சகோதரர்கள், நம் கல்வித் திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்காக ரூபாய் 50,000 அளித்து, நமக்குப் பெரும் ஊக்கத்தை யுண்டு பண்ணினார்கள். கிலாபத்கமிட்டியின் தூதுவக்கூட்டமொன்று, பரிசுத்தமான ஹிஜாஸ் தேசத்திற்குச் சென்று திரும்பிவந்திருக்கிறது. இக்கூட்டம் செய்துள்ள சேவையை இந்தியாவும் முஸ்லிம் உலகும், நன்கறியும். வருங்காலத்தில் இன்னமும் உண்மைகள் விசேஷமாய் வெளிவரும்.

நானில்லாத காலத்தில், கடன்வாங்கி கிலாபத் கமிட்டியின் வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. அக்கடனை, உடனே தீர்க்க வேண்டி யிருக்கிறது. அதன் பொறுப்பு, இந்தியாவின் எல்லா கிலாபத் கமிட்டியின் ஊழியர்களைச் சார்ந்ததாகும்.

கிலாபத் கமிட்டியின் செலவுக்காகவும், ரௌலாஷரீபின் செலவுக்காகவும், முஸ்லிம்கள் ஒரு மாதத்திற்குள் தங்கள் தங்களின் ஜில்லாக்களிலிருந்து, ஏதேனுமொரு தொகையை யனுப்ப வாரம்பித்து விடவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஸென்ட்ரல் கிலாபத் கமிட்டியின் சென்ற கூட்டத்தில் சில மெம்பர்கள், கிலாபத் கமிட்டியை வைத்திருப்பதும், ஹிஜாஸுக்குத் தூதுவ கோஷ்டியை யனுப்பியதும், பாவமென்று பொருள்படும்படி பேசி யிருக்கின்றனர். கிலாபத் கமிட்டியின் வேலையைக் கெடுக்கவோ, அல்லது வேலையை நிறுத்திவிடவோ வேண்டுமென்னும் எண்ணத்தைக் கொண்டிருக்கும் ஒரு கூட்டம், நமக்குள்ளேயே தோன்றி யிருப்பதாய் நானபிப்பிராயப்படுகின்றேன். உட்சண்டை, மனக்கசப்பு ஆகியவைகளை யான் ஆதரிப்பவனல்லன்.

வைராக்கியம் காரணமாய் என் கண்கள் குருடாகி விடுவதில்லை. ஆனால், கிலாபத் கமிட்டியை ஸ்தாபிப்பதும், அதைப் பலப்படுத்துவதும் இஸ்லாமின் நன்மைக்காகவும், இந்தியாவின் க்ஷேமத்திற்காகவும், இன்றியமையாதவை யென்பதே என் நம்பிக்கையாகும். ஆதலின் கிலாபத் கமிட்டியின் சக்தியைக் குறைப்பதற்காக முயற்சிப்போர்க்கு அறிவு புகட்டுவதற்காக பலம் குன்றிய என்சப்தம், குறைந்த சக்தி, ஆகியவைகளைச் செலவிடுவேன். கிலாபத் கமிட்டியைக் கெடுக்க முன்வரும் சக்தி, அரசாங்கமாயினும் சரி, கூட்டமாயினும் சரி, ஒரு நபராயினும் சரி, எதையும் நான் பொருட்படுத்த மாட்டேன்

என்னுடைய இவ் விண்ணப்பம், வீண்போகாதென்றே நம்புகிறேன். இன்று முதற்கொண்டே வேலையாரம்பமாகு மென்றும் நாள்தோறும் ஏதேனு மோருதவி, கிலாபத் கமிட்டி ஆபீஸுக்கு வந்துகொண்டிருக்கு மென்றும் நம்புகிறேன்.

இந் நற்காரியத்தை முன்னிட்டு எங்களுக்கு ஒவ்வொரு வழியிலும் உதவி செய்யுமாறு, முஸ்லிம் பத்திரிகைகளையும், கிலாபத் ஊழியர்களையும், இஸ்லாமிய ஊழியர்களையும், இஸ்லாமிய சங்கங்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

காதியானிகளும், அஹ்மதியாக்களும்.

(லாஹூர் பார்ட்டியான அஹ்மதியாக்களின் ஒரு அறிக்கையையும், கொளும்பிலுள்ள காதியானிக் கொள்கையைச் சார்ந்த "தூதன்" என்னும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் ஒரு வியாசத்தையும் இதனடியில் பிரசுரித்திருக்கிறோம். காதியானிக் கொள்கையை லாஹூர் பார்ட்டியான அஹ்மதியாக்களும், அஹ்மதியாக்களின் சூழ்ச்சியை காதியானிகளும் மறுத்துக் கொண்டிருப்பதன் உண்மையை இவ்வியாசங்களின் மூலமாய் அறியக்கூடும்.)

அஹ்மதியாக்களின் அறிக்கை.

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத ஆலாவின் திருநாமத்தினால்
நாம் இறைவனைப் புகழ்ந்து அவனது திருத்தூதர்மீதும்
வாழ்த்துக் கூறுகின்றோம்.

"அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்க லஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸுலுஹு"—இதன் பொருள்: "அல்லாஹுத ஆலாவைத்தவிர மெய்

யாக வணக்கத்துக்குப் பாத்திரவான் வேறு யாருமில்லையென அறுதி யிட்டு உறுதி கூறுகிறேன்; அவன் தனித்தவன்; அவனுக்கு இணை யாருமில்லை; மெய்யாக முஹம்மது நபியவர்கள் (இவர்களுக்கு இறைவ னருளும் அவன் நன்மாராயமு முண்டாகுக) அவனுடைய அடி யாரும், திருத்தூதரும் ஆவார்களென்றும் அறுதியிட்டு உறுதி கூறுகிறேன்.''

இஸ்லாமிய சகோதரர்காள் ! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாத்தஹு.

மேலே குறிக்கப்பட்டிருக்கும் கலிமாவானது:—மகா பரிசுத்த மான மந்திரமா யிருக்கிறது; ஏனெனின் இதை இதர மதஸ்தன் ஒருவன் மனஸால் நம்பி வாயால் உச்சரித்தவுடன் அவன் இஸ்லா மார்க்கத்தில் சேர்ந்து விடுகிருன். அவன் ஷை கலிமாவை ஒப்புக் கொண்டபின்னர் அவனை முஸ்லிம் அல்லவென்று சந்தேகப்படுவ தற்கு வேறு எந்த முஸ்லிமுக்கும் அதிகாரமில்லை.

இந்த ஷஹாதத்துக் கலிமாவை மனதாரச் சொல்லிக்கொண்டே நாம் இதன்கீழ் கையெழுத்துப்போடுகிருேம்; இன்னும் இதனடியில் நாம் தெரிவித்துக் கொள்ளுவதாவது:—

ஹஜரத்து மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் காதியானி பான்யே ஸில்ஸிலேஅஹ்மதியா அவர்கள் நமக்கு நேர்வழியைக்காட்டும் முர்ஷிதாக (பேராசிரியராக) இருக்கிருர்கள். ''நான் ஆண்டவனுயிருக்கிறேன். எனக்கு குன்பயக்கூனுடைய (அதாவது:—ஆகு என்று சொன்னவுடன் ஆகக்கூடிய) சக்தி அமைந்திருக்கிறது; நான் ஆண்டவனுடைய ரஸூலாக இருக்கிறேன்; இன்னும் அவனுடைய நபியாகவும் இருக்கிறேன்,'' என்றும் இன்னும் பலவிதமாகவும் ஹஜரத்து மிர்ஸா சாஹிப் தம்மைச் சொல்லிக் கொண்டதாக அவர்மீது தோஷம் கற்பிப்பவர்கள் கற்பனையாக வீண்பழி தூற்றுகின்றுர்கள். இவையனைத்தும் அவர்மீது அக்கிரமமான தூஷணையாகும். உண்மையான இஸ்லா மார்க்கத்தில் நிலைக்கொண்டு குர்ஆன் ஷரீபின் ஒவ்வோர் அக்ஷரத்தின்மீதும் ஈமான் கொண்டு, ஆண்டவன் ஒருவனே என்னும் ஏக தெய்வக்கொள்கையை இவ்வுலக முழுவதும் பரவச்செய்து வந்த, அவருடைய வார்த்தைகளை உருட்டிப் புறட்டிச் சின்னுபின்னப்படுத்தி அவரைக்காபிர் என்றும், தீனுல் இஸ்லாத்துக்கே விரோதி யென்றும் சொல்லுகிருர்கள். ஹஜரத்து மிர்ஸா சாஹிப் உயிருடன் இருந்த காலத்திலேயே அவரிடம் பய்யத்து வாங்கிக்கொண்டு அவருடன் நாங்கள் இருந்து அவரது கொள்கைகளையும், அவர் மூல்யமாகவே கற்றுக்

கொண்டோம். அவருடைய சாலிஹான அமலேயும், (சாந்தகுண மான நடை) பரிசுத்தமான தீனுல் இஸ்லாத்தின் கட்டளைகளை அவர் தலைமேற் கொண்டு பக்தியுடன் நடந்ததையும், இன்னும் இதற்கெல் லாம் மேல் இஸ்லாத்தின் உண்மைக்காகத் தம் உயிரைக்கொடுக்கவும் அவர் ஆயத்தமா யிருந்ததையும் நிதரிசனமாய்ப் பார்த்திருக்கிறோம். ரசூலெகரீம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்மீது, இவர் வைத்திருந்த முஹப்பத்து (நேசம்) முதலியவற்றையும் எமது கண் களால் கண்டோம். இஸ்லாத்தின் அபிவிருத்திக்காக அவர் உழைத்து வந்த உழைப்பையும் பார்த்திருக்கிறோம். இக்காலத்தில் அவ்வரைவிட வேறொருவரையும் அவ்வாறு நாங்கள் கண்டதில்லை.

நம் இஸ்லாமிய சகோதரர்கள் கெட்ட செய்கையைவிட்டு நீங்கும் பொருட்டும், இஸ்லாம் விர்த்தியாக விர்த்தியாக அதில் பலவகைப் பிரிவினைகளால் ஏற்படும் ஒருவித முஸீபத்தை (துன்பமான கெடு தல்) எம்மால் ஆனமட்டும் குறைக்கும் பொருட்டும், இஷாஅத்தே இஸ்லாம் என்னும் நம் சன்மார்க்கப் பரவுதலைக் கெடாமல் காப்பாற் றும் பொருட்டும், சம்பூர்ண மனதுடன் இந்த ஷஹாதத்துல்லாஹ் அதாசெய்கிறோம்:—

(1) ஹஜரத்து மிர்ஸாகுலாம் அஹ்மது சாஹிப் காதியானி பான்யே ஸில்ஸிலே அஹ்மதியா அவர்கள் உண்மையான முஸல்மானு யிருந்தார்கள். ஸுன்னத்து ஜமாஅத்தின் கொள்கைகளை யெல்லாம் அவர் முழுதும் ஒத்துக்கொண்டிருந்தார்.

(2) நமது ஹஜரத்து பயகம்பர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல் லம் அவர்களே கடைசி நபியென்று அவர் உறுதி கொண்டிருந்தார். இந்த நபியவர்களுக்குப்பின் வேறு யாரேனும் தன்னை நபியென்றுவா தம்செய்வாராயின் அப்படிப் பட்டவரெல்லாம் பொய்யர்களென்றும், காபிர்களென்றும் அவர் உறுதியான அபிப்பிராயம் வைத்திருந்தார்.

(3) தமக்கு நுபுவ்வத்து (நபித்தன்மை) உண்டென்றும், ரிஸா லத்து (தேவதூது) உண்டென்றும் அவர் ஒருபோதும் தாவாச்செய் யவேயில்லை. ஆனால், தமக்கு முஹம்மதிய்யத்தும் (உண்மையை விளக்கிக் காட்டுதல்) முஜத்ததிய்யத்தும் மதசீர்திருத்தம் செய்தல் உண்டென்று தாவாச் செய்து வந்தார்.

மேலே சொன்ன இவ்விஷயங்களை மெய்ப்பிக்கும் பொருட்டு அவர்களால் எழுதப்பட்ட ஒரு கவியின் கருத்தை இதன்கீழ் எடுத் தோதுகிறோம்: "ஆண்டவனருளால் நான் ஒரு முஸ்லிமாயிருக் கிறேன். பரிசுத்தமான நாயகம் அவர்கள் என்னுடைய இமாமே பேஷ்வாவாகவும், ரசூலாகவும் இருக்கிறார்கள்; அவர்களின் நாம

தேயம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களது நடையுடை பாவனைகளெல்லாம் பரிசுத்தமானவை; அவர்கள் கைருர் ரஸுலாகவும், கைருர் அனமாகவும் இருக்கிறார்கள். எல்லா நுபுவ்வத்தும் அவர்கள்மீது முடிவாய்விட்டது.

இன்னும் அவர் சொல்கிறார்; "நுபுவ்வத்து விஷயமாகவும், மலக்குகள், ஜீப்ரால், லைலத்துல்கதர், முஅஜிஸாத்து, மிஅராஜ், நரகம், சுவர்க்கம் சம்பந்தமாகவும் யான் தூஷணையான விகற்ப அபிப்பிராயம் கொண்டிருப்பதாக, இந்த தெஹ்லி தேசத்துச் சில பெரிய உலமாக்கள் என்மீது வீண்பழி சுமத்துவதாக அடியேன் கேள்விப்படுகிறேன். அவர்கள் அப்படிச் சொல்வதனால் யான் உண்மையாக வெளிப் படுத்துவதாவது:—இவர்கள் என்மீது சொல்லும் இப்பழிச்சொல் என் அகீதாவுக்கு (நம்பிக்கையான கொள்கை) நேர் விரோதமாயிருக்கிறதென்று தெரிந்தவர்களும், தெரியாதவர்களுமான எல்லாப் பெரிய மனிதர்களின் சமுகத்திலும் விண்ணப்பித்துக் கொள்கிறேன். நான் நபிப்பட்டத்துக்காகத் தாவா செய்பவனல்லன்; இன்னும் முஅஜிஸாத்து, மலாயிக்கத்துகள், லைலத்துல் கதர் முதலியவற்றைக் குறித்துத் தூஷணை செய்பவனல்லன்; ஆனால், இஸ்லாத்தின் அகீதாக்கள் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் ஒப்புக்கொள்கிறேன்; ஸுன்னத்து ஜமாஅத்தின் கொள்கைகளை நான் முழுதும் ஒத்துக்கொள்ளுகிறேன்; குர்ஆன் ஷரீபையும், ஹதீது ஷரீபையும் எல்லா முஸ்லிம்களும் ஏற்றுக் கொள்ளுகிறபடியே நானும் ஏற்றுக்கொள்ளுகிறேன். நபிமார்களுக்கெல்லாம் கடைசி நபியாகிய ஸைய்தனா வமௌலானா ஹஜரத்து முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்குப்பின் யாரேனும் தனக்கு நுபுவ்வத்தும், ரிஸாலத்தும் உண்டென்று தாவா சொல்வானாயின், அவனைப் பொய்யனென்றும், காபிரென்றும் எண்ணுகிறேன். வஹீ ரிஸாலத்து ஹஜரத்து ஆதம்சபீயுல்லா அவர்கள் காலமுதல் ஆரம்பமாகி ஜனாப் ரசூலுல்லாஹ் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் காலத்தோடு முடிவடைந்து விட்டதென்று எனக்கு நம்பிக்கையுண்டு.

அவர்கள் கேட்கும் சவால்:—"பத்தஹுல் இஸ்லாம் என்னும் புத்தகத்தில் நுபுவ்வத்தின் தாவா செய்திருக்கிறதல்லவா?"

என் ஜவாப்:—'அது நுபுவ்வத்தின் தாவா அல்ல; ஆனால், முஹத்ததிய்யத்தின் தாவா, அல்லாஹுதஆலாவின் கட்டளையின் மேல் செய்யப்பட்ட தாவா அது.'

இன்னும் இதர விஷயமாக அவர்கள் என்மீது பழிசுமத்துவ தாவது:—‘ இந்த மனிதன் ஹலத்துல் கத்தரின் பழிப்புக்காரன்; முஅஜிஸாத்தைப் பழிப்பவன்; இன்னும் மிஃராஜைப் பழிப்பவன்; நபிப்பட்டம் தனக்கு உண்டென்று தாவா செய்பவன்; நபிப்பட்டம் ஏற்கனவே முடிவடைந்து விட்டதென்பதைப் பழிப்பவன்.

இவை முழுதும் என்மீது வீண்பழி சுமத்துவதாயிருகின்றன. “எல்லா ஸூன்னத்து ஜமாஅத்தின் மதஹபு என்னவோ அதுதான் என் மதஹபும்.”

இஸ்லா மார்க்கம் இப்போது எப்படியிருக்கிறதென்றால், நமக்குள் இருக்கும் தகரார்களால் இதர மதஸ்தர்களின் கேள்விகளுக்கு இடமுண்டாகும் படியாய்விட்டது. இதையெல்லாம் நிதானிக்கும் போது, இப்போது நமக்கு வேண்டியது என்னவென்றால், நமக்குள் உண்டாகும் விக்றபங்களை நிவர்த்திக்கவும், இஸ்லா மார்க்கத்தில் அன்னிய மதத்தினரைச் சேர்ப்பிக்கவும் முயற்சி செய்யவேண்டியிருக்கிறது. ஆனால், இப்போது துரதிருஷ்டத்தினால் நம்முடைய எல்லா முயற்சிகளும் இஸ்லாமானவர்களைக் காபிர் என்று சொல்வதிலேயே முடிவடைந்து விடுகின்றன. ஹஜரத்து மிர்ஸா சாஹிபின் ஊழியம் இப்போதும் பகலில் தோன்றும் சூரியன்போல் பிரகாசிக்கிறது. இஸ்லாத்தின் கேவலமான நிலைமையைக் கண்டு, அவருடைய மனத்தில் எவ்வளவு கஷ்டம் இருந்ததென்றால், அவர் தம்முடைய மனத்திலிருந்த கஷ்டத்தைப் பெரிய ஜமாஅத்தாரின் மனத்தில் பதியும்படி செய்து, அதனால் இஷாஅத்தே இஸ்லாத்தை விருத்தி செய்வதற்காக அவரவர்கள் தங்கள் தங்கள் வீட்டை விட்டு வெளிக் கிளம்பும்படியாய்விட்டது. இன்னும் இதர மதஸ்தர்களின் தாக்குதலால் மறைந்துபோகும்படியான ஸ்திதியிலிருந்த இஸ்லா மார்க்கத்துக்கு உயிருண்டாக்கி யிருக்கிறார். இப்படிப்பட்ட மகான் தானே அடிக்கடி தன்னுடைய கொள்கையானது, எல்லா ஸூன்னத்து ஜமாஅத்தாரின் கொள்கைதானென்று பகிரங்கப்படுத்தியிருக்கும்போது, அவரைக் காபிர் என்று சொல்வதால் தீனுல் இஸ்லாத்துக்கும், முஸ்லிம்களுக்கும் என்ன நன்மை யிருக்கிறது? ஒரு காபிர் கலிமா தவ்ஹீதின்மீது தன் நம்பிக்கையை நிலைநிறுத்தின பிறகு, அவனை இஸ்லாத்தின் விரோதியென்று எண்ணினவர்களைப் பார்த்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், “நீங்கள் அவன் மனதைப் பிளந்து பார்த்தீர்களா?” என்று கண்டனஞ் செய்து அப்படி அவனை நினைக்கக் கூடாதென்று தடைசெய்த விஷயம் உங்களுக்கு ஞாபகம் வரவில்லையா? இஸ்லாத்தின் ஊழியத்துக்

காக ஒருவர் தன் ஜீவதிசையைத் தத்தம் செய்ததோடு நில்லாமல், இன்னும், அனேகருடைய ஜீவதிசையையும் தத்தம் செய்யும்படி செய்வித்தவரைக் காபிர், தஜ்ஜால், பொய்யன், இஸ்லாத்தின் விரோதி, பழிகாரன் என்று சொல்லுவது நாம் இஸ்லாத்துக்குச் செய்யக்கூடிய நல்ல ஊழியமாய்க் காணப்படவில்லை. ஆனால், இஸ்லாத்துக்கு அது நஷ்டத்தை உண்டுபண்ணும் காரியமாய்க் காணப்படுகிறது. இன்னும் மஜ்லிஸ்களிலும், வஅல்களிலும், லெச்சர்களிலும் அவரைக் குறித்துச் சிரித்துப் பரிகாசம் செய்கிறார்கள். இப்படிப்பட்ட தீய செய்கைகளின் குவியலால் அடையவேண்டிய பிரதி பலனை அவர்கள் ஆகிர் லோகத்தில் நிச்சயமாக அடைவார்கள். ஆனால், தற்சமயம் இப்படிப்பட்ட கெட்ட தூஷணையால் தீனுல் இஸ்லாத்திற்கு எவ்வளவோ நஷ்டம் விளைந்திருக்கிறது. இஸ்லாம் விஷயமாய் மனம் வருந்தும் மனிதர்களிடத்தில் நாம் அபீல் செய்து கொள்ளுவதாவது.—நபீகரீம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், "ஒருவன் மற்றொருவனுடைய உயிரைக் கொல்வதும், பிறருடையசொத்தை இச்சிப்பதும் எப்படி ஹராமாயிருக்கிறதோ அப்படியே, ஒருவனுடைய கீர்த்திக்கு மற்றொருவன் தீங்கு செய்வதும்," என்று திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார்கள். பிறருடைய பெருமையை இழிவு செய்வதைக் குறித்து, நாயகமவர்கள் அதிக கடுமையாய்க் கண்டித்திருக்கிறார்கள். முஸ்லிம்கள் தங்கள் பெரியோர்களுக்கு மரியாதை செய்யக் கற்றுக்கொள்ளவேண்டும். அவர்களை அகௌரவம் செய்யாமல் நன்கு மதிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். இப்படியெல்லோரும் இருந்து வருவோமாயின் முஸ்லிம்களுக்குள் ஒற்றுமையும், சினேகமும் உண்டாகும். இக்காலத்தில் வஅஸ் (பிரசங்கம்) செய்பவர்கள் மஜ்லிசில் பெரியோர்களைத் தூஷித்துச் சொல்லிவிட்டால், தமது பிரசங்கம் பூர்த்தியாய் விட்டதென்று கருதுகிறார்கள். இப்படிச் செய்வதனால் முஸ்லிம்களின் ஒற்றுமையின் ஆணிவேர்களை அசைத்துவிட்டது போலாய்விடுகிறது.

ஆனால், காலஞ்சென்ற ஹஜரத்து மிர்ஸா சாஹிபுடைய கொள்கைக்கு உட்பட்டு, அவருக்கு மரியாதை செய்துவந்தவர்களில் ஒரு கூட்டத்தார் அவரை நபியென்று நம்பவில்லையா வென்று யாரேனும் கேட்கும் பக்ஷத்தில், அவருக்கு நாம், சொல்வதாவது:—முற்காலத்தில் நபிமார்களையும், அவுலியாக்களையும் ஆண்டவனுடைய பந்துக்களென்று சிலர் சொல்லவில்லையா? ஹஜரத்து அலீ ரலியல்லாஹு, அன்ஹு, ஹஜரத்து இமாம் அவஸ ரலியல்லாஹு அன்ஹு ஹஜரத்து ஸையத் அப்துல் காதர் ஜீலானி ரலியல்லாஹு

அன்ஹு முதலிய அநேக பெரியோர்களேயும் மேன்மை படுத்த எண்ணி அவர்களுடைய நிலைமையைச் சிலர் ஷிருக்கு வரையில் கொண்டு போய் விடவில்லையா? ஆதலின், நாம் எல்லா முஸ்லிமுக்கும் அப்பீல் செய்து கொள்ளுவதாவது:—பொறுமையாலாவது, அல்லது பக்ஷத்தாலாவது கண்மூடிக் கொண்டிருப்பவர்களின் வார்த்தைகளைக் கவனியாமல் நடு நிலைமையாகவும், ஜாக்ரதையாகவும் ஒருவழியை ஏற்றுக்கொண்டு, ஹஜரத்து மிர்ஸா சாஹிபுடைய வேலையைக் கவனித்துப் பாருங்கள். இன்னும், ஒரு கூட்டத்தாரை இஸ்லாத்தின் ஊழியத்துக்காகக் கிளப்பி விடும்படியான வேலையானது, ஒரு பொய்யனுலாவது, பழிக்காரனுலாவது முடியக்கூடிய காரியமா வென்றும் நோட்டமிடுங்கள்.

வெளியிட்டவர்களின் கையெழுத்து. —

1. முகம்மதலி, எம். ஏ., எல்., எல்., பி., பிரஸிடெண்ட், அஹ்மதியா அஞ்சுமன், இஷாஅத்தே இஸ்லாம் லாஹூர்.

2. கான் சாஹிப், குலாம் ஹஸன்கான், வைஸ்பிரஸிடெண்ட், அஹ்மதியா அஞ்சுமன், இஷாஅத்தே இஸ்லாம் லாஹூர்.

3. ஸையத் முஹம்மது ஹுஸைன், எல்., எம்., எஸ்., ஆனரெரி ஜனரல் ஸெக்ரடெரி, அஹ்மதியா அஞ்சுமன், இஷாஅத்தே இஸ்லாம் லாஹூர்.

4. ஆபூயூஸுபு முபாரக்கலி, ஸியால்கோட்.

5. ஜமாலுத்தீன், பி., எ., இன்ஸ்பெக்டர் of ஸ்கூல்ஸ், ஜம்முன்.

6. ஸையத் அப்துல் ஜப்பார்ஷா ஸாபிக் பாதுஷாஹே சவாத்.

7. ஷேய்கு நயாஸ் அஹ்மது, முன்ஸிபல் கம்மிஷ்னர், ஸவ்தாகிர், சர்ம், வஜீராராபாத்து.

8. ஷேய்கு நூர் அஹ்மது, பி. எ., எல். எல். பி., பிளீடர் ஸப்ட்ஆபாத்து.

9. முஹம்மது எஹயா, தீபகிரான், ஜிலேஹஸாரா.

10. முஹம்மது ஏமீன், தாத ஜிலேஹஸாரா.

11. யாகூப்பேக், எல். எம். பிஸிஷன் & ஸர்ஜன், லாஹூர்.

12. ஸையது முஹம்மது ஹஸன். அமுர்தஹுவி லைப்மெம்பர், அஹ்மதியா அஞ்சுமன்; இஷாஅத்தே இஸ்லாம், லாஹூர்.

13. காஜா கமாலுத்தீன், பி. ஏ. எல். எல். பி; முஸ்லிம் மிஷனரி, வோக்கிங் மிஷன், இங்கிலாந்து.

14. கான்ஸாஹிப், குலாம்ரசூல்கான், டெப்டிஸுபரின்டெண்டெண்ட் of போலீஸ், பெரோஸ்பூர்.

15. முஹம்மது ஜான், வர்த்தகம், வஸீராபாத்து.

16. ஷேர்முஹம்மது, பி.ஏ.,பர்ஸனல் அஸிஸ்டெண்ட், ரெவின்யூமெம்பர், ஜமூன்ஸ்டேட்.

17. ஷேய்கு மௌலாபக்ஷ், புரொப்ரைட்டர், பாஹே, மில்ஜ லாயிட்பூர்.

18. முஹம்மது அஜப்கான், தாசில்தார், நவ்ஷேஹரா.

19. பஷாரத் அஹ்மத்; எல். எம். எஸ். அஸிஸ்டெண்ட் ஸர்ஜன், கர்னல்.

20. அப்துர் ரஹ்மான், ஏ. ஏ. சி. குஜரன்வாலா.

21. சாஹெப் ஜாதா ஸைபுர் ரஹ்மான், பிஷாவர்.

22. அஜீஸ் பக்ஷ் ஸூபரின்டெண்டெண்ட், ஜில்லா டேராகாஸிகான்.

(குறிப்பு:—மேற்கூறிய அறிக்கையானது:— "தாருல் இஸ்லாம்" பத்திரிகை அச்சிடப்படும். "கார்ட்டியன்" அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.)

காதியானியைச் சார்ந்த "தூதனி"ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வியாசம்.

சில மாதங்களாக கனம் காஜா சாஹிப் அவர்கள், இலங்கைக்கு வரப்போகிற விஷயத்தைப்பற்றி அநேக கடிதங்கள் இங்கிலீஷ் பத்திரிகைகளிலும், தமிழ்ப் பத்திரிகைகளிலும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அதிற் சில சிநேகிதர்கள் அவரது வருகையைப் பற்றி மகிழ்ந்தவர்களாகவும், சிலர் அவரது வருகையினால் இலங்கை முஸ்லிம்களுக் கிடையில் பிரிவினை யுண்டாய் விடுமென்றும், இன்னும் சிலர் அவர் அஹ்மதியென்றும், சிலர் அவர் அஹ்மதியல்லையென்றும் பலவிதமாய் எழுதி வருகிறார்கள். ஆனால், நாம் சொல்லுவதாவது:—கனம் காஜா சாஹிபும், கனம் மவ்லவி முஹம்மதலி சாஹிபும் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களை 1914 வரையிலும் முஜத்திதென்றும், மஹ்தி யென்றும், மஸீஹ் என்றும், நபி என்றும் நம்பியிருந்தார்களேயொழிய நம்பாமலிருக்கவில்லை. ஏனெனின் ஜனுப் முஹம்மத் அலி சாஹிபும், ஜனுப் காஜா சாஹிபும் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட, சதுர் அன்ஜுமானில் செக்ரிடெரியாகவும், கமிட்டி மெம்பராகவும் அஹமதிய்யாப் போதகர்களாகவு மிருந்தார்களென்பது யாவருமறிந்த விஷயமே. இவர்கள் மஸீஹ் (அலை) அவர்கள் வாதித்த காலத்திலிருந்து அவர்கள் மரணமட்டிலும், அவர்களாலெழுதப்பட்ட கிதாபுகளை வாசித்து மிருக்கிறார்கள். அதன்பின்

ஹஸ்ரத் அவ்வல் (முதல்) கலீபா அவர்களின் மரணம் வரையிலும் மஸீஹ் (அலை)அவர்களின் எல்லாவாதங்களையும் நம்பியுமிருந்தார்கள். இவர்கள் காதியானைவிட்டும் பிரிந்ததின் காரணம்:—கலீபா அவ்வல் (றலி) அவர்கள் மரணித்தபொழுது, கனம் முஹம்மதலி சாஹிபை கலீபாவாக்குவதற்கு அவருடைய சிநேகிதர்கள் எடுத்த முயற்சியில் ஜயம்பெற முடியாமற் போனதால், அவரும் தமது சிநேகிதர்களும் காதியானை விட்டுப் புறப்பட்டு, லாகூருக்குப்போய் அவ்விடத்தில் அன்ஜுமான் அஹ்மதிய்யா இஷா அத்தே இஸ்லாம் என்ற சங்கம் ஸ்தாபித்து, தற்போதிய இரண்டாவது கலீபா நாயகமவர்களுக்கு விரோதமாய், இவர் கலீபாவுக்குத் தகுந்தவரல்லவென்றும், மஸீஹ் (அலை) அவர்கள் நபித்துவத்தை வாதிக்கவில்லையென்றும், 1914-ம் வருஷத்திலிருந்து இதுவரையில் போதித்து வருகிறார்கள். அதிலொருவரே கனம் காஜா சாஹிபு. இவ்விஷயத்தை இலங்கை முஸ்லிம்களைப் பார்க்க வட இந்திய முஸ்லிம்கள் மிக அறிந்தவர்கள்.

இப்போது நாம் பார்க்கவேண்டியது கனம் காஜாசாஹிபு அன்ஜுமான் அஹ்மதிய்யா இஷாஅத்தே இஸ்லாமின் போதகரா? இல்லையா? வென்பதையே. கனம் முஹம்மதலி சாஹிபு எழுதிய "The Split" என்னும் புத்தகத்தில், காஜாசாஹிப் அஹமதிய்யா இஷா அத்தே இஸ்லாமின் போதகரிலொருவரென்றும், அவர் வோக்கிங் பள்ளியில் போதிக்கிறாரென்றும் எழுதியிருக்கிறார். இந்த அஹமதிய்யா இஷாஅத்தே இஸ்லாம் என்னும் சங்கத்தாரால் வெளிப்படுத்தப்படுகிற "பைகாமே சுல்ஹ" என்ற பத்திரிகையை வாசித்தாலும் இதன் யதார்த்தத்தை விளங்கிக் கொள்ளலாம். தற்போது நம்முஸ்லிம் களுக்குத் தேவைப்படுவதானது காஜா சாஹிப் இலங்கைக்கு வந்தால் அவரிடம் கீழ்க் காட்டும் கேள்விகளைக் கேட்கவேண்டும்.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமத் (அலை) அவர்கள் மரண பரியந்தம், அவர்கள் எழுதிய கிதாபுகளில் ஆண்டவன் தங்களை நபி என்று கூப்பிட்டிருக்கிறானென்று எழுதியிருக்கிறார்களே. கலீபா அவ்வல் (றலி) அவர்களிருக்கும் வரையிலும், அதாவது 1914-ம் வருஷ மட்டிலும் தாங்களும் அவ்விதமே நம்பியிருந்தீர்கள். இப்போது என்ன சொல்லுகிறீர்கள்? இந்த உம்மத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றிய பறகத்தினால் ஆயிரக்கணக்கான அவ்லியாக்களுண்டானார்கள். ஒருவர் உம்மத்தி நபியாகவுமானார் (ஹகீகத்துல் வஹி 28-ம் பக்கம் ஹாஷியா)

மேலும், மஸீஹ் (அலை) அவர்கள் அதேகிதாபு 149-150-ம் பக்கங்களில் ஆண்டவன் தங்களுக்கு மழையைப் போல் வஹி இறக்கியு

தாகவும், தங்களுக்கு நபியுடைய பட்டத்தைக் கொடுக்கப் பட்டதாக வும், தங்களை ஓர் உம்மத்தி நபியாக்கப் பட்டதாகவும் எழுதியிருக் கிறார்கள். திரும்பவும் நுசூலுல் மஸீஹ் என்னும் கிதாபில் 48-ம் பக்கத்தில் மஸீஹ் தாங்களே என்றும், மஸீஹுக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபியுல்லாவென்று நாமம் வைத்திருக்கிறார்களென் றும் எழுதியிருக்கிறார்கள். இதைப்போல் அநேக தலீல்களை அவர் களின் கிதாபுகளில் காணலாம். மித்திரர்களே! கனம் காஜா சாஹிப் வந்தால் இந்த அத்தாட்சிகளைப்பற்றி விசாரியுங்கள். மேல் காட்டிய கிதாபுகளிலுள்ள விஷயங்களை 1914-ம் வருஷம் வரையில் எவ்விதம் நம்பி யிருந்தீர்களென்று கேளுங்கள். (தொடரும்)

(குறிப்பு:—காதியானி வகுப்பைச் சார்ந்த "தூதன்" பத்திரி கையில் ஜனாப். கே. எம். ஹஸன் அவர்களால் மேல் வரையப்பட் டிருக்கும் வியாசமானது:—லாஹூர் பார்ட்டியான அஹ்மதியாக் களின் அறிக்கையையும், அவர்களின் கொள்கையையும் ஓரளவு மறுக் கக் கூடியதாக விருப்பினும், அவ்வறிக்கைக்கு "சுன்னத் ஜமாஅத்து" களின் மறுப்பை இன்ஷா அல்லாஹுத ஆலா மறுசஞ்சிகைகளில் பிரசுரிப்போம்.)

உலகத்தைப் பூசிப்பவர்களின் மதம்.

லண்டனில் "நேஷன்" என்னும் ஒருவாராந்தரப் பத்திரிகை, விசேஷச் செல்வாக்குள்ளதாக விருக்கிறது. அப்பத்திரிகை கவி மான்களிடத்தில் அதிமதிப்பைப் பெற்றிருக்கிறது. அப்பத்திரிக்கை சமீபகாலத்தில் தன் படித்தக் கையொப்பக்காரர்களின் மதாபிமானத் தைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு, 14 கேள்விகளைவிடுத்து, அக் கேள்விகளுக்கு விடைக்கோரிற்று. அதற்கு சுமார் 1500 கையொப் பக்காரர்களிடமிருந்து விடைகள் கிடைத்திருக்கின்றன. அதில் சில விசேஷமான கேள்விகளையும், அவைகளுக்குரிய விடைகளோடு இத னடியில் வரைகின்றோம்.

1-வது கடவுள் உண்டென்பதை யொப்புக் கொள்ளுகிறீர்களா ? வென்னும் வினாவிற்கு, கடவுள் உண்டென்னும் விடைகள் 537-ம், கடவுள் இல்லையென்னும் விடைகள் 736-ம், கடவுள் உண்டென்ற வது இல்லையென்றாவது நிச்சயிக்கமுடியாமல் மௌனம்சாதித்து 114 விடைகளும் வந்திருக்கின்றன.

2-வது மரணமடைந்த பின்னர் ஜீவிப்பதென்னும் நம்பிக்கை யுங்களுக்குண்டா ? என்னும் கேள்விக்கு, அந்நம்பிக்கையுண்டென்ற

விடைகள் 578-ம், அத்தைகைய நம்பிக்கையை மறுக்கக் கூடிய விடைகள் 646-ம், 114 விடைகள் மௌனம் சாதிப்பதாயு மிருக்கின்றன.

3-வது மஸீஹை தேவக்குமாரனென்று ஒப்புக்கொள்ளுகிறீர்களா? வென்னும் வினவிற்கு, ஒப்புக்கொள்ளுவதாகவுள்ள விடைகள் 474-ம், மறுக்கக்கூடிய விடைகள் 819-ம், மௌனம்சாதிப்பது 45 விடைகளுமாகும்.

4-வது, எம்முறையிலேனும் கிறிஸ்தவராக விருக்கின்றீர்களா? என்னும் கேள்விக்கு, ஆம்என்னும் விடைகள் 666-ம், எவ்வகையிலும் கிறிஸ்தவராகயில்லை என்ற விடைகள் 585-ம், 27 விடைகள் மௌனம் சாதிக்கக் கூடியவையாகவிருக்கின்றன.

5-வது பைபிளை தேவவாக்கியமென்று ஒப்புக்கொள்ளுகிறீர்களா? வென்னும் வினவிற்கு, ஆம் என்ற விடைகள் 377-ம், பைபிள் தேவவாக்கியமல்லவென்று மறுத்து 918 விடைகளும் 43 விடைகள் மௌனம் சாதிப்பவையாகவு மிருக்கின்றன.

6-வது தௌராத்தென்னும் வேதத்திலுள்ள "ஜனன" மென்னும் அத்தியாயத்தை யுண்மையென வொப்புக்கொள்ளுகின்றீர்களா? என்னும் கேள்விக்கு, ஆம் என்னும் விடைகள் 89-ம், அக்கொள்கையைமறுத்த விடைகள் 1216-ம், மௌனம் சாதிப்பவையாக விருக்கும் விடைகள் 34 மாகவுமிருக்கின்றன.

7-வது தாங்கள் மதசம்பந்தமான வெவ்வணக்கத்திலேனும் சந்தோஷத்தோடு சேர்ந்து கொள்ளுகிறீர்களா? என்னும் கேள்விக்கு, ஆம் என்னும் விடைகள் 571-ம், மறுக்கும் விடைகள் 74-ம் மௌனம் சாதிப்பது 25-மாகும்.

மேலே விபரிக்கப்பட்டிருக்கும் விடைகளின் மூலமாய் ஆங்கிலேயர்களையும், குறிப்பாய் அந்நாட்டில் கல்வித்தேர்ச்சியுள்ள வகுப்பின் மனோ நிலையை ஓரளவு தெரிந்து கொள்ளலாம். உண்மை இவ்வாறிருக்கும்போது அவர்களைக் கிறிஸ்தவர்களென்று கருதமுடியுமா? நம் உலமாக்களுள் சிலர் அவர்களை (அஹ்லெகிதாபு) வேதக்காரர்களெனக் குறிப்பிட்டு, அவர்களோடு சாந்தமாயும், சமாதானமாயும் வாழவேண்டுமென்னும் அபிப்பிராயத்தை இன்னமும் கூறுவார்களா? அல்லாஹுத்ஆலா உண்டென்பதை மறுப்பவர்களும், மரணத்திற்குப் பிறகு ஜீவிப்படுதென்னும் கொள்கையை மறுப்பவர்களும், பெரும்பான்மையோராகவுமுள்ள வகுப்பை யெவ்வகையிலேனும், மதசம்பந்தமானவர்களென்று கூறுவது நியாயமாகுமா?

இஸ்லாமும் ஜனநாயகமும்.

(அல்லாமா மௌலானா ஷிப்லி அவர்களின் ஆராய்ச்சி)

அரேபியாவில் ஏற்படும் ஆட்சிகள் ஜன நாயகத்துவத்தைப் பின் பற்றியதாக விருந்ததை முன்னிட்டு, அந்நாடு இயற்கையாகவே ஜனநாயகத்துவமுள்ளதென்று கருதக்கூடாது. ஏனெனின்? அந் நாட்டில் நீண்ட காலமாய் நஅமி, அமரி, கஸ்ஸானி என்னும் மூன்று விசாலமான ஆட்சிகள் இருந்தன. அவைகள் ஏதேச்சாதிகார முள்ளவையே யாகும்.

ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைச் சூழ்ந்து கொண்டிருந்த ஆட்சிகளும் ஜன நாயகத்துவத்தைக் கொண்டிருக்க வில்லை. ஆகவே, ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், பின் பற்றத்தக்க ஆட்சிகளைக் கண்ணுறமுடியாத நிலைமையிலேயே ஜன நாயகத்துவ ஆட்சிக்கு அஸ்திவாரக் கல்லை நாட்டினார்கள். அக் காலத்தின் நிலைமையானது ஜன நாயகத்துக்குரிய சகல ஒழுங்கு முறையும் ஏற்பட சாதனமாக விராது போயிருப்பினும், ஜன நாயகத் துவத்திற்கு இன்றி யமையாத ஜீவன் போதியவளவு உண்டாய் விட்ட தன்றே கூறவேண்டும்.

ஜன நாயகத்து வத்தைச் சார்ந்த எல்லா அங்கங்களுக்கும் முதன்மை யானது:—ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டுவதாகும். முக்கியமான விஷயங்கள் நிகழும் போழ்து, சதா அறிவாளிகளின் கூட்டங்கள் கூட்டப்பட்டு வந்தன. எக்காரியமும் அக்கூட்டத்தின் ஆலோசனைக்கு வராமலும், பெரும் பான்மையோரின் அபிப்பிராயத் தைப்பெறுமலும் அனுஷ்டானத்திற்கு வரமுடியாமலிருந்தது. அக் கூட்டத்தைக் கூட்டவேண்டுமாயின் ஒருவர் "அஸ்ஸலாத்து ஜாமிஅ" வென்று சகல ஜனங்களும் அறியும் வண்ணம் கூவி விளம் பரம் செய்வார். இச்சப்தைத்தச் செவியுற்ற ஜனங்கள் கூடிய பின்னர், உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மஸ்ஜிதே நபவியில் இரண்டு ரக்அத்து தொழுகையைத் தொழுவார்கள். தொழு கைமுடித்ததும் மிம்பரிலேறி (குத்பா) பிரசங்கம் செய்து, ஆலோ சிக்கவேண்டிய விஷயத்தைச் சபையோர்க்கு அறிவிப்பார்கள். (அல் பாரூக், 2-ம் பாகம் 12-13-ம் பக்கங்கள்.)

சாதாரண விஷயங்கள் மேற்கூறியவாறு கூட்டப்படும் கூட் டங்களில் தீர்மானிக்கப்படுவது போதியதெனக் கருதப் பட்டதா யினும் அதிமுக்கியமான பெரும் விஷயங்கள் எதிர்படும்போழ்து

முஹாஜிரீன்கள், அன்ஸார்கள் ஆகியவர்களின் பொதுக்கூட்டத்தைக் கூட்டி, அக்கூட்டத்தில் ஏகமனதாய்ச் செய்யப்படும் தீர்மானப்படி, அக்காரியம் அனுஷ்டானத்துக்கு வரும்.

உதாரணமாய் ஷாம், இராக் ஆகிய நாடுகள் கைப்பற்றப் பட்டதும், சில ஸஹாபாக்கள் அந்நாடுகளைச் சைனியங்களுக்கு மானியஞ் செய்துவிட வேண்டுமென்று வற்புறுத்தியபோழ்து, மிகப் பெரிய கூட்டமொன்றுகூடி, பலநாட்கள்வரை அது நடந்துவந்தது. அளவற்ற சுயேச்சையோடு அக்கூட்டத்தில் பலர் பிரசிங்கித்தனர். இவ்வண்ணமே சைனியங்களின் சம்பளம், ஆட்சி சம்பந்தமான வரவு, செலவு கணக்குகளை வைக்கும் முறை, உத்தியோகஸ்தர்களின் நியமனம், முஸ்லிமல்லாதார்க்கு வியாபாரச் சுதந்தர மளிப்பது, அந்நியர்களின் வியாபாரத்திற்கு வரிவிதிப்பது முதலிய அனேக விஷயங்கள் மேற்கூறியவாறு முஹாஜிரீன்கள், அன்ஸார்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு முடிவு பெற்றிருக்கும் விபரங்கள், சரித்திரங்களில் வரையப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். அக்கூட்டங்களில் சபையோர்கள் அவ்வப்போழ்து புரிந்தப் பிரசங்கங்களும் சரித்திரங்களில் வரையப்பட்டிருக்கின்றன. (அல்பாரூக் 2-ம் பாகம் 13-14 பக்கங்கள்.)

மேற்கூறப் பட்டுள்ள கூட்டங்கள் கூட்டப் பட்டதும், அறிவாளிகளின் ஆலோசனையை அங்கீகரிப்பதும், ஜனங்களுக்குச் செய்யவேண்டிய உபகாரமென்றுவது, தலைவரின் பெருந்தன்மையைச் சார்ந்ததென்றுவது கருதிச்செய்யப் படவில்லை. "ஆலோசனைக் கேட்காத கிலாபத் முற்றிலும் ஜாயிஸில்லை" என்று, ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பல சந்தர்ப்பங்களில் வெகு தெளிவாய்க் கூறியிருக்கின்றார்கள். ஆலோசனைக் கூட்டமானது, அனேகமாய் குறிப்பான விஷயங்களை முன்னிட்டே கூட்டப்பட்டு வந்ததாயினும், அக்கூட்டத்தைத்தவிர மற்றொரு சிறிய சபையுமிருந்தது. அச்சிறிய சபையானது ஒவ்வொரு நாளும் நடைபெறவேண்டிய முக்கியமான விஷயங்களைப் பற்றி இச்சபையில் விவாதம் நடந்துகொண்டிருக்கும். இச்சபையானது சதாமஸ்ஜிதேநபவியிலேயே கூடும். முஹாஜிரீன்களான ஸஹாபாக்கள் மட்டுமே இச்சபையில் கலந்து கொள்ளுவார்கள். மாகாணங்களிலிருந்தும், ஜில்லாக்களிலிருந்தும் கிலாபத்தின் தர்பாருக்கு வந்து கொண்டிருக்கும் தினசரி சமாச்சாரத்தை, ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இச்சபையிலேயே வெளியிடுவார்கள். (அல்பாரூக் 2-ம் பாகம் 14-ம் பக்கம்.)

முக்கிய கவனிப்பு.

பத்திரிகை வாசிக்காதவர்கள் தங்கள் கடமையைத் தெரிந்து கொள்ள முடியாதென்பதே இக்காலத்துப் பெரும் பாலரின் அபிப்பிராயமாக விருக்கின்றது.

பத்திரிகை வாசிக்கப்பணம் வேண்டிய தவசியமாகும். பண முள்ளவர் தாங்கள் பத்திரிகையை வாசிக்காமலிருப்பதற் காகக் கூறும் வார்த்தைகள் எவருக்கும் வியப்பைத் தருமென்பது திண்ணம். பண மில்லாதவர்கள், பத்திரிகையை வாசிப்பதும் தங்கள் கடமையை உணர்ந்து கொள்வது மெங்ஙனம்?

பணமுள்ளோர் எளியோருக்கு உண்ண உடுத்தக் கொடுப்பதைத் தருமமென்று கூறுவ துண்மையே. பணமில்லாத காரணத்தால் பத்திரிகையின் மூலமாய்த் தங்கள் கடமையைத் தெரிந்து கொள்ள முடியாத எளியோர்கள், பத்திரிகையை வாசிக்கும் படிச்செய்வது தர்மமல்லவா? உண்ண உடுக்கக்கொடுப்பதைக் காட்டினும் ஜனங்கள் தங்களுடைய கடமையை உணர்ந்து கொள்ளும்படி செய்வது பெரிய தர்மமென்பதை எவரும் மறுக்கமுடியுமா?

பெரும்பாலும் தங்களுடைய கடமையின்ன வென்பதை யறியாமலும், அதையறிய முயற்சிக்காமலும் இருப்பவர்களே பணக்காரர்களாக விருப்பதால் அன்னோர் தர்மமா? அதர்மமா? வென்றும் சிந்திக்காமல் மதிமயங்கி, மனம்போன வாறெல்லாம் பணத்தை விரயஞ் செய்து விட்டுப் பெரும் தர்மத்தைச் செய்து விட்டதாக மகிழ்ந்து விடுகின்றனர். ஜனங்களுக்கு அவர்களின் கடமையை யுணர்த்துவது உண்ண உடுக்கக் கொடுப்பதைக் காட்டிலும் நல்ல தர்மமென்பது மட்டுமின்றி இது பணக்காரர்களின் கடமை யென்பது மறுக்க முடியாத உண்மையாகும்.